
என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

லண்டனில்
தரமான
பொருள்கள்
நிரு

November 2018 FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest




*Lakshmis Jewellers*


தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


BRINGING GREAT FOOD TO LIFE...
Nelli
Orange Soda
Quento
NO 1 Brand
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2048

**கார்த்திகை-மார்கழி**

மலர் : 17

இதழ் : 180

**நவம்பர் - 2018**



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

**கணக்கு எண் :** 29513668
**வங்கி இலக்கம் :** 77 91 29
**வங்கி :** Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
**தமிழ் அலை**
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


**UNLEASH THE POWER OF GOLD**

**THARANI**

**JEWELLERY & PAWNBROKERS**

**UK'S CHEAPEST GOLD LOANS**

**STARTING FROM 2.95% PER MONTH**

**GOLD LOANS**

**THE CHEAPEST GOLD LOAN PROVIDEDR IN WEMBLEY**

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month, It's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

**Our Rates of Interest**

**£100 to £4999 2.95 % Per Month**
**APR 38.7%**

**Loan Term:** Up to 6 Months
**Documents Required**
**Photo ID - Passport or UK Driving Licence**
**Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months**

**Terms and Conditions**

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.


If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time,we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£69
புதுப்பித்தல்
£49
14 மாதங்கள்
SET TOP BOX
INCLUDED
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
£4.99
மட்டுமே
App Store
tv
Roku
chromecast
SMART TV
LG Smart
android tv
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
தமிழ்
KTV
7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்
SUBSCRIBE NOW!
0207 132 2727
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

# அஞ்சலி



# அஞ்சலி







# South Harrow Food & Wines

## 234, 236 Northolt Road
## South Harrow

### ஆடியில் வழங்கும் கோலாகல மலிவு விற்பனை

நீங்கள் நம்ப முடியாத மலிவு விலையில்

இலங்கை இந்திய உணவு பொருட்கள்

பசுமை மாறாத மரக்கறி வகைகள்

புது சுவை மாறாத கடல் உணவு வகைகள்






1969 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அதற்கு பிறகு 1970ம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு சென்ற போது நடிகர் சோவையும், நடிகை மனோகரம்மாவையும் என்னுடைய கரம்பன் வீட்டுக்கு அழைத்திருந்தேன். இதனால் அவர்களிடையே எனக்கு ஒரு சிறு நட்பு ஏற்பட்டது. பங்குனி மாதம் 1971 ஆம் ஆண்டு எனது திருமணம் திருப்பரம் குன்றத்தில் நடைபெற்றது. திருமணம் முடிந்தபின் திருப்பரம் குன்றத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு சென்னைக்கு வந்தோம் அந்த நேரத்தில் தமிழின்பால் பற்றுக்கொண்ட கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அவரை சந்தித்து வாழ்த்து பெற எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவரை போய் சந்தித்து அவருக்கு மாலையிட்டு வாழ்த்துப் பெற்று பின் யாழ்பாணம் திரும்ப ஆயுத்தமானேன்.

அந்த நேரத்தில் இலங்கையில் சேகுவாரா-வின் உள்நாட்டு கலவரம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் நாடு முழுவதும் முழுநாள் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நான் திருச்சியிலிருந்து யாழ்பாணம் செல்வதற்கு விமான நிலையம் வந்தபோது சேகுவாராவின் குழப்பத்தினால் இலங்கையில் நடைபெற்றதால், திருச்சி விமானநிலையம் மக்கள் கூட்டமாக இருந்தது. நான் எப்படி யாழ்ப்பாணம் செல்வது என எண்ணி நின்றபோது எனது சட்டைப்பையில் இருந்த முதலமைச்சரின் படம் விமான ரிக்கட் மனேச்சரின் கண்ணுக்குத் தெரிந்தது. அவர் எனக்கு விசேட ரிக்கட் பதிந்து என்னை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார்.

இதன் பின் தமிழ்நாட்டிற்கு வரும்போது எல்லாம் கலைஞர் கருணாநிதி அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1982ம் ஆண்டு அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தபோது அவர் கேட்ட கேள்வி என்னுடைய வாழ்த்து பலித்ததா? அதற்கு நான்-எனக்கு 5 பிள்ளைகள் என பதிலளித்தேன். இந்த காலகட்டம் புலிகள் இல்லாத காலம் என்பது குறிப்பிடத்தக்கது இதன் பின்பு அவர் இலங்கை மக்களுக்காக டேசோ மகாநாடு நடத்தினார் அதற்கு நான் ஒரு அழைப்பாளராக சென்று இருந்தேன். அந்த மகாநாட்டையும் மறக்க முடியாது.

# குருப்பெயர்ச்சி
# 2018 முதல் 2019 வரை




உயர்ந்த குறிக்கோள்களுடன் வாழ்பவர்களே!

உங்கள் ராசிக்கு 7ம் இடத்தில் இருந்த குருபகவான், வரும் 4.10.18 முதல் 28.10.19 வரை 8ம் வீட்டில் மறைவதால், எதையும் சமாளித்து மீளும் சாமர்த்தியத்தையும், சோதனைகளை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தையும் தருவார். அலைச்சலுடன் ஆதாயம் கிடைக்கும். அடிக்கடி பயணங்களும், அடுக்கடுக்கான செலவுகளும் ஏற்படும். செலவுகளுக்கு ஏற்ப வருமானமும் இருக்கும். சுற்றியிருப்பவர்களைப் புரிந்துகொள்வீர்கள். ராஜதந்திரமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

பழைய கடன்கள் விஷயத்தில் இதமாகப் பேசி வட்டியைத் தருவீர்கள். ஏற்கெனவே இருக்கும் பிரச்னைகளுக்கு மாறுபட்ட கோணத்தில் யோசித்துத் தீர்வு காண்பீர்கள். கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் மூன்றாவது நபரின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். வழக்குகளால் நெருக்கடிகள் ஏற்பட்டு நீங்கும். மறைமுக எதிரிகளால் ஆதாயம் கிடைக்கும். ஒரே நேரத்தில் பல இரண்டு, மூன்று வேலைகளைச் சேர்த்துச் செய்யவேண்டி வரும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டு விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

*குருபகவானின் அதிசார சஞ்சாரம்:*

*13.3.19* முதல் *18.5.19* வரை அதிசாரத்தில் ராசிக்கு 9ம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். பிதுர்வழிச் சொத்து கைக்கு வரும். அரசாங்க விஷயங்கள் அனுகூலமாக முடியும். தந்தை ஆதரவாக இருப்பார். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

*குருபகவானின் வக்ர சஞ்சாரம்:*


*10.4.19* முதல் *18.5.19* வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் *19.5.19* முதல் *8.8.19* வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியிலும் செல்வதால், அரைகுறையாக நின்ற வேலைகள் முடிவடையும். குடும்பத்தில் ஓரளவு நிம்மதி உண்டாகும். பழைய கடனில் ஒரு பகுதியைத் தந்து முடிப்பீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பாதியில் நின்ற வீடுகட்டும் வேலையைத் தொடங்குவீர்கள். வாழ்க்கைத்துணையுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும்.

*உத்தியோகஸ்தர்களுக்கு:*

வியாபாரத்தில் கவனமாக இருக்கவேண்டிய காலக்கட்டம் இது. சிறுசிறு நஷ்டங்கள் ஏற்படக்கூடும். தரமான பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் புதிய வாடிக்கையாளர்கள் வருவார்கள். பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கவும். வேலையாள்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. கடையை வேறு இடத்துக்கு மாற்றும் முயற்சியில் அவசரம் வேண்டாம். இரும்பு, கடல் உணவுகள், ஹோட்டல், ஏற்றுமதி இறக்குமதி வகைகளால் லாபம் அதிகரிக்கும். பங்குதாரர்களால் பிரச்னைகள் ஏற்படக்கூடும்.

*வியாபாரிகளுக்கு:*

அலுவலகத்தில் பணிகளில் அலட்சியம் வேண்டாம். மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்கவேண்டி வரும். உயரதிகாரிகள் உங்களைப் புரிந்துகொள்ள மாட்டார்கள். உங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டினால் பொறுமையாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களை விட வயதிலும் அனுபவத்திலும் குறைவானவர்களிடமும் பணிந்து செல்லவேண்டிய நிலை ஏற்படும். சிலருக்கு விரும்பத் தகாத இடமாற்றம் உண்டாகும். சிலருக்கு வெளிநாடு செல்லவேண்டிய வாய்ப்பு ஏற்படும்.






பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்ப்பவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 6ல் இருந்த குருபகவான், *4.10.18* முதல் *28.10.19* வரை 7ம் வீட்டில் அமர்வதால், எதிலும் உங்கள் கை ஓங்கும். வாழ்க்கையின் நெளிவுசுளிவுகளைக் கற்றுக்கொள் வீர்கள். வீண் சண்டை, விவாதங்களில் இருந்து ஒதுங்குவீர்கள். உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும்.

திருமணம் கூடி வரும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். சிலர் வங்கிக் கடனுதவி பெற்று வீடு கட்டி கிரகபிரவேசம் செய்வீர்கள். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணை உங்களுடைய முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியம் மேம்படும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் இருந்த மோதல் போக்கு நீங்கும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். உறவினர், நண்பர் வீட்டு விசேஷங்களை நீங்களே முன்னின்று நடத்துவீர்கள். புதிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு ஏற்படும்.

குருபகவான் உங்கள் லாப வீட்டைப் பார்ப்பதால், பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஷேர் மூலம் பணம் வரும். கடினமான காரியங்களையும்கூட எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். சமூகத்தில் கௌரவப் பதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். வெளி மாநிலங்களில் இருக்கும் புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் ஏற்படும்.

மூத்த சகோதர வகையில் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் நீங்கும். ராசிக்கு 3ம் வீட்டைப் பார்ப்பதால், சவால்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப் பணம் தந்திருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப்பதிவு செய்வீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். கோயில் விழாக்களில் கலந்துகொள்வீர்கள்.

*4.10.18* முதல் *20.10.18* வரை குருபகவான் விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், வேலைச்சுமையால் சோர்வு உண்டாகும். திடீர்ப் பயணங்களை மேற்கொள்ள நேரிடும். அடிக்கடி தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு விலகும். மூத்த சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புதுப் பொறுப்புகளை நன்றாக யோசித்து ஏற்றுக்கொள்வது அவசியம்.

*21.10.18* முதல் *19.12.18* வரை சனிபகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் செல்வதால், எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் ஆரோக்கியம் சீராகும். சொந்தமாக வீடு கட்டுவீர்கள். வேலை கிடைக்கும். வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். ஷேர் மூலம் பணம் வரும். திருமணம் கூடிவரும். சிலருக்குப் புதுத் தொழில் தொடங்கும் வாய்ப்பு ஏற்படும்.

*20.12.18* முதல் *12.3.19* வரை மற்றும் *9.8.19* முதல் *27.10.19* வரை புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், தடைப்பட்ட வேலைகள் முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். வி.ஐ.பி.களின் அறிமுகம் கிடைக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்று வீர்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வரும்.

*13.3.19* முதல் *18.5.19* வரை குருபகவான் கேதுவின் மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், மறைமுக எதிர்ப்புகள் ஏற்படக்கூடும். பணப்பற்றாக்குறையும், மனதில் இனம் தெரியாத கவலைகளும் ஏற்படக்கூடும்.

*10.4.19* முதல் *18.5.19* வரை மூலம் நட்சத்திரத்திலும், *19.5.19* முதல் *8.8.19* வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால், மனக்குழப்பம், பூர்வீகச் சொத்துப் பிரச்னை, வீண் டென்ஷன் ஏற்படக்கூடும். பிள்ளைகளை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் கருத்துகளை அவர்களிடம் திணிக்க முயற்சி செய்யவேண்டாம். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்துகொள்வது அவசியம். கோயில் கும்பாபிஷேகங்களை முன்னின்று நடத்துவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.




மன்னிக்கும் மனப்பக்குவம் உள்ளவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 5 ல் இருந்த குருபகவான், 4.10.18 முதல் 28.10.19 வரை 6ம் வீட்டில் மறைகிறார். சகட குரு எதிர்ப்புகளைத் தருவாரே என்று கலங்கவேண்டாம். ஓரளவுக்கு நல்லதே நடக்கும். வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்காமல், உங்கள் முயற்சியால் முன்னேற நினைப்பீர்கள். உங்களுடன் பழகுபவர்களின் பலவீனங்களை உணருவீர்கள். சிலநேரங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பணம் எவ்வளவு வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் துரத்தும். வீண் சந்தேகத்தாலும் ஈகோ பிரச்னையாலும் நல்ல வர்களின் நட்பை இழக்க நேரிடும். கணவன் மனைவிக்கிடையே மனவருத்தம் ஏற்படக்கூடும்.

ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலர் பூர்வீக வீட்டை விற்றுவிட்டு, புறநகர்ப் பகுதியில் குடியேறுவீர்கள். தவணை முறையில் புதிய வாகனம் வாங்குவீர்கள். அடிக்கடி தாழ்வு மனப்பான்மை, மன இறுக்கம் உண்டாகும். உறவினர் மற்றும் நண்பர்களுடன் கருத்துவேறுபாடு கள் ஏற்பட்டு நீங்கும். வி.ஐ.பி.க்களுடன் அனுசரணையாகச் செல்லவும். நெருங்கிப் பழகிய நண்பர்கள்கூட உங்களைப் பற்றி குறை கூறுவார்கள். சமூகத்தின் மீது சின்னச் சின்ன கோபங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலர் உங்களைத் தவறான பாதைக்குச் செல்லத் தூண்டுவார்கள் என்பதால் கவனமாக இருக்கவும். உதவுவதாகச் சொன்னவர்கள் மனம் மாறிவிடக்கூடும் என்பதால், மாற்று வழியை யோசித்து வைப்பது நல்லது. சிலர் நேரில் பார்த்தால் புகழ்ந்து பேசுவதும், பின்னால் உங்களை விமர்சிக்கவும் செய்வார்கள். மனிதர்களின் இரட்டை வேடத்தைப் புரிந்துகொள்வீர்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

குருபகவான் 2ம் இடத்தைப் பார்ப்பதால் பணவரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பழைய நகையை மாற்றி, புது டிசைனில் நகை வாங்குவீர்கள். வாகனப் பழுதை சரிசெய்வீர்கள். மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். மகனின் பிடிவாதப் போக்கு மாறும்.

குரு உங்கள் ராசிக்கு 10ம் வீட்டைப் பார்ப்பதால் புது வேலை கிடைக்கும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். பழைய பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும்.

குரு 12ம் வீட்டைப் பார்ப்பதால், கோயில் திருப்பணிகளில் ஈடுபடுவீர்கள். வெளியூர்ப் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:

4.10.18 முதல் 20.10.18 வரை குருபகவான் விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், வேலைச்சுமை, வீண் அலைச்சல், கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு, வாழ்க்கைத்துணைக்கு மருத்துவச் செலவுகள், உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவுகள் ஏற்படக்கூடும். உங்களைப் பற்றி மற்றவர்கள் அவதூறாகப் பேசுவார்கள். வாகனப் பழுது ஏற்பட்டு நீங்கும்.

21.10.18 முதல் 19.12.18 வரை சனிபகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் செல்வதால், பணம் வரத் தொடங்கும். வருமானம் அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். தந்தையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிதுர்வழிச் சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும். வெளி மாநிலங்களில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டாகும். புதிய பதவி, பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், திடீர் பணவரவு உண்டு. தோற்றப் பொலிவு கூடும். அறிஞர்களின் நட்பு கிடைக்கும். அறிவுப்பூர்வமாகப் பேசி மற்றவர்களைக் கவருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். வீட்டை விரிவுபடுத்துவீர்கள். பழைய கடனைத் தீர்க்க உதவி கிடைக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

13.3.19 முதல் 18.5.19 வரை குரு கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் அதிசாரமாகச் செல்வதால், செல்வாக்கு கூடும். பணவரவு அதிகரிக்கும். வி.ஐ.பி.களின் அறிமுகம் கிடைக்கும். வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்திலும், 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால், உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பூர்வீகச் சொத்தில் ரசனைக்கேற்ப மாற்றம் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மறுபடியும் பெறுவீர்கள். கோயில் கும்பாபிஷேகம் போன்ற வைபவங்களில் கலந்துகொள்வீர்கள். ஆனால், அடிக்கடி முன்கோபம் வந்து செல்லும். திடீர்ப் பயணங்கள், கடன் தொந்தரவுகளும் ஏற்பட்டு நீங்கும். ஷேர் மூலம் பணம் வரும்.




கலங்கி வருபவர்களின் கவலைகளைத் தீர்ப்பவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 4ல் இருந்த குருபகவான், 4.10.18 முதல் 28.10.19 வரை 5ம் வீட்டில் அமர்ந்து நன்மைகளை அள்ளித் தரவிருக்கிறார். இனி புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். அடிப்படை வசதி வாய்ப்புகள் உயரும். குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். சிந்தனையில் தெளிவும், செயலில் விவேகமும் காணப்படும். கருத்துவேறுபாடு காரணமாக மனக்கசப்புடன் இருந்த கணவன் மனைவிக்கிடையே மனக்கசப்பு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். மகளின் திருமணத்தை சீரும் சிறப்புமாக நடத்துவீர்கள். மகனுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

தாய்வழி உறவினர்கள் உதவியாக இருப்பார்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் குறையும். சிலருக்கு சொந்தமாக வீடு வாங்கும் யோகம் உண்டாகும். பழைய வாகனத்தை மாற்றி, புதிய வாகனம் வாங்குவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். உங்கள் அறிவுரையை பிள்ளைகள் ஏற்றுக்கொள்வார்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் மத்தியில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். நண்பர்களால் ஆதாயம் உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங்கள் இனி ஏற்படக்கூடாது என்பதில் விழிப்பு உணர்வுடன் இருப்பீர்கள். உங்களைப் பற்றிக் குறை கூறிய உறவினர்கள் மனம் மாறி வலிய வந்து பேசுவார்கள்.

குருபகவானின் பார்வைப் பலன்கள்:

குரு உங்கள் ராசிக்கு 9ம் வீட்டைப் பார்ப்பதால் நினைத்ததை முடிப்பீர்கள். வெற்றியாளர்களின் அறிமுகம் கிடைக்கும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். கோயில் கும்பாபிஷேக வைபவத்தை முன்னின்று நடத்துவீர்கள். தந்தையுடன் இருந்த மனஸ்தாபம் நீங்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

11ம் வீட்டைப் பார்ப்பதால், புகழ், கௌரவம் கூடும். மூத்த சகோதரர்களுடன் ஒற்றுமை வலுப்படும். பணவரவு உயரும். புதிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு ஏற்படும். ஷேர் மூலம் பணம் வரும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

4.10.18 முதல் 20.10.18 வரை குருபகவான் விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், பணப்புழக்கம் அதிகரிக்கும். அடுத்தடுத்த சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். எதிர்ப்புகள் குறையும். திருமணம் கூடி வரும். குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். தந்தையின் ஆதரவு கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிதுர்வழிச் சொத்துப் பிரச்னை சுமுகமாக முடியும்.

21.10.18 முதல் 19.12.18 வரை சனிபகவானின் அனுஷம் நட்சத்திரத்தில் செல்வதால், பணிச் சுமையாலும் கூடுதல் பொறுப்புகளாலும் பதற்றம் அதிகரிக்கும். வீண் சந்தேகத்தின் காரணமாக நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். வீண்பழி ஏற்படும். கடன் பிரச்னைகளை நினைத்து கலக்கம் ஏற்படும். வாழ்க்கைத்துணைக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை புதனின் கேட்டை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால், திடீர் பயணங்கள், வீண் செலவுகள், சளித் தொந்தரவு, கழுத்துவலி, வாகனப் பழுது ஏற்பட்டு நீங்கும். முடிவுகள் எடுப்பதில் குழப்பம் ஏற்படும். முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. பூர்வீகச் சொத்துப் பிரச்னைக்கு சுமுகமாகத் தீர்வு காண்பது நல்லது.

13.3.19 முதல் 18.5.19 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 6ம் வீட்டில் கேதுவின் மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், அடிக்கடி வாகனம் பழுதாகி செலவு வைக்கும். வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். விலையுயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் பழுதாகும். மற்றவர்களுக்கு ஜாமீன் கொடுக்காமல் இருப்பது நல்லது.

குருபகவானின் வக்ர சஞ்சாரம்:

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் செல்வதால், பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது அவசியம். மகளுக்கு நல்ல வரன் அமையும். சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். தடைப்பட்ட விஷயங்கள் முடிவடையும். தூரத்து உறவினர்கள் தேடி வருவார்கள். குடும்பத்தினருடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சிலர் வீடு மாறுவதற்கான சூழ்நிலை ஏற்படும்.




மற்றவர்களுக்கு உதவும் மனம் கொண்டவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 3ல் இருந்த குருபகவான், *4.10.18* முதல் *27.10.19* வரை 4ல் அமர்ந்து பலன் தரவிருக்கிறார். சந்தர்ப்பச் சூழ்நிலை அறிந்து செயல்படும் சாமர்த்தியத்தைக் கற்றுக்கொள்வீர்கள். உங்களின் பலம் பலவீனம் அறிந்து செயல்படுவது நல்லது. மற்றவர்கள் கணவன் மனைவிக்கிடையே குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உணர்ச்சி வசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப் பார்க்கவும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாருக்கு மூட்டு வலி, முதுகுத்தண்டில் வலி ஏற்பட்டு நீங்கும்.

வீடு, மனை வாங்கும்போது பத்திரங்களை ஒருமுறைக்கு இரண்டுமுறை சரிபார்த்து வாங்கவும். ஒரு பக்கம் பணவரவு இருந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் துரத்திக் கொண்டே இருக்கும். தாழ்வு மனப்பான்மையால் மனஇறுக்கம் உண்டாகும். அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய வரிகளை உடனுக்குடன் செலுத்திவிடவும். உறவினர்கள் மத்தியில் உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பை வளர்த்துக்கொள்வது அவசியம். தாய்வழி உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்னையில் அவசரம் வேண்டாம்.

குருபகவான் உங்கள் ராசிக்கு 8ம் வீட்டைப் பார்ப்பதால், பயணங்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் ஏற்படும். மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் ஏற்படும். 10ம் வீட்டைப் பார்ப்பதால், சிலருக்கு புது வேலை கிடைக்கும். சம்பளப் பாக்கி கைக்கு வரும்.12ம் வீட்டைப் பார்ப்பதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். புண்ணியத் தலங்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

*4.10.18* முதல் *20.10.18* வரை குருபகவான் விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். குலதெய்வக் கோயில் திருப்பணிகளில் பங்கேற்பீர்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். புது வாகனம் வாங்குவீர்கள்.

*21.10.18* முதல் *19.12.18* வரை சனிபகவானின் அனுஷ நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால், மற்றவர்களிடம் நம்பிக்கையின்மை, சோர்வு ஏற்பட்டு நீங்கும். சுபச்செலவுகள் ஏற்படும். புதிய நபர்களை வீட்டுக்கு அழைத்து வரவேண்டாம். மறதியின் காரணமாக விலையுயர்ந்த பொருள்களை இழக்க நேரிடும். வாழ்க்கைத்துணையுடன் அதிருப்தி ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

*20.12.18* முதல் *12.3.19* வரை மற்றும் *9.8.19* முதல் *27.10.19* வரை குருபகவான் புதனின் கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், டென்ஷன் அதிகரிக்கும். சில நேரங்களில் தனிமைப் படுத்தப்பட்டதாக நினைத்து வருந்துவீர்கள். பணப்பற்றாக்குறையால் கடன் வாங்கவும் நேரிடும். சிலர் உங்கள் மீது வீண்பழி சுமத்துவார்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரை மாற்றவேண்டிய நிலை ஏற்படும்.

*13.3.19* முதல் *18.5.19* வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் கேதுவின் மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், பணவரவு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். மகளின் திருமணம் கூடிவரும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கு சாதகமாக முடியும். மகனின் பிடிவாதப் போக்கு மாறும்.

*10.4.19* முதல் *18.5.19* வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் *19.5.19* முதல் *8.8.19* வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால், திடீர் திருப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக முடியும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். சுற்றியிருப்பவர்களைப் பற்றிப் புரிந்துகொள்வீர்கள். புதிய பதவி, பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வீட்டில் கூடுதலாக ஒரு தளம் அல்லது அறை அமைப்பீர்கள்.

வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருந்தபடி இருக்கும். சந்தை நிலவரம் அறிந்து முதலீடு செய்வது அவசியம். தொழில் ரகசியங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டாம். விளம்பர யுத்திகளைக் கையாள்வதன் மூலம் வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கலாம். கடையை வேறு இடத்துக்கு மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படும். வாடிக்கையாளர்களின் அதிருப்தியை எதிர்கொள்ள நேரிடும். பங்குதாரர்களுடன் மோதல் போக்கு விலகும். நம்பிக்கைக்கு உரிய பங்குதாரர் விலக நேரிடும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தபடி இருக்கும். உயரதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொள்வார்கள். கஷ்டப்பட்டு உழைத்தாலும் அங்கீகாரமோ பாராட்டோ கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. அடிக்கடி இடமாற்றம் ஏற்படும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

பாடங்களில் ஆரம்பத்திலிருந்தே கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். எதிர்பார்த்த பாடப்பிரிவில், விரும்பிய கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்க அதிகப்படியாக செலவு செய்யவேண்டி வரும்.




கனவு நனவாகக் கடுமையாக உழைப்பவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 2ல் இருந்த குருபகவான், 4.10.18 முதல் 28.10.19 வரை 3ம் இடத்தில் அமர்வதால், எந்த வேலையையும் ஒருமுறைக்கு இரண்டுமுறை போராடித்தான் முடிக்கவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இளைய சகோதர வகையில் பிணக்குகள் வரும். மற்றவர்களுக்கு ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். புதிய நபர்களை வீட்டுக்கு அழைத்து வருவதைத் தவிர்க்கவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே சச்சரவுகள் ஏற்பட்டாலும் அந்நியோன்யம் குறையாது. முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது.

அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாகச் செல்வது நல்லது. விலையுயர்ந்த ஆபரணங்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும். சிலர் உங்களைப் பற்றி நேரில் நல்லவிதமாகவும், பின்னால் அவதூறாகவும் பேசுவார்கள். உறவினர் மற்றும் நண்பர்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ளவேண்டாம். வெளிவட்டாரத்தில் மற்றவர்களைப் பற்றி விமர்சித்துப் பேசுவதைத் தவிர்க்கவும். வழக்குகளில் வழக்கறிஞரை மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீடு கட்டுவது, வாங்குவது சற்றுத் தாமதமாக முடியும்.

க குரு உங்கள் ராசிக்கு 7ம் வீட்டைப் பார்ப்பதால் வாழ்க்கைத்துணை வழியில் உதவிகள் உண்டு. வீண் நட்புகள் விலகும். கனவுத் தொல்லை குறையும். குரு 9ம் வீட்டைப் பார்ப்பதால் பணவரவு அதிகரிக்கும். தந்தைவழி சொத்துகள் கைக்கு வரும். வேலை கிடைக்கும். குரு லாப வீட்டைப் பார்ப்பதால் மூத்த சகோதரர் ஆதரவாக இருப்பார். வெளிநாட்டில் இருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

4.10.18 முதல் 20.10.18 வரை உங்கள் ராசிக்கு 9 மற்றும் 12ம் வீடுகளுக்கு உரிய குருபகவான், தன் சாரமான விசாக நட்சத்திரத்தில் செல்வதால், தாயாருக்கு நெஞ்சு எரிச்சல், முதுகுத் தண்டில் வலி வந்து போகும். அவருடன் வீண் விவாதங்களும் வரக்கூடும். வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு சரிபார்ப்பது அவசியம். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே ஆரோக்கியமான விவாதங்கள் வந்து செல்லும். வாழ்க்கைத்துணைக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும்.

21.10.18 முதல் 19.12.18 வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பை அறிந்து அதற்கேற்ப அவர்களை நெறிப்படுத்துவீர்கள். பூர்வீகச் சொத்தை சீர் செய்வீர்கள். சொந்தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். பிற மொழி பேசுபவர்களால் பயனடை வீர்கள்.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். அழகு, அறிவு கூடும். குடும்பத்திலும் சந்தோஷம் குடிகொள்ளும். புதிதாக சொத்து வாங்குவீர்கள். உடல் நலம் சீராகும். நட்பு வட்டம் விரிவடையும். பெரிய பதவியில் இருக்கும் உங்களுடைய பழைய நண்பரால் ஆதாயமடைவீர்கள்.

13.3.19 முதல் 18.5.19 வரை அதிசாரத்தில் ராசிக்கு 4ம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், அவ்வப்போது விரக்தியடைவீர்கள். ஒருவித படபடப்பு, ஹார்மோன் பிரச்னை, ஈகோவால் கணவன் மனைவிக்கிடையே சச்சரவு வந்து நீங்கும். பணப்பற்றாக்குறை ஏற்படும்.

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியிலும் செல்வதால், எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வேற்றுமாநிலம் அல்லது வெளிநாட்டில் வேலை அமையும். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீடு வாங்குவீர்கள்.

வியாபாரிகளே! சில சூட்சுமங்களையும், ரகசியங்களையும் தெரிந்துக்கொண்டு அதற்கேற்ப லாபம் ஈட்டுவீர்கள். பழைய பாக்கிகளைப் போராடி வசூலிப்பீர்கள். புதிய நண்பர்களால் வியாபாரத்தை விரிவுபடுத்தும் வாய்ப்புகள் வரும். வேலையாட்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். தரமானப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். கட்டட உதிரி பாகங்கள், ஸ்டேஷனரி, கெமிக்கல், டிராவல்ஸ் வகைகளால் ஆதாயமடைவீர்கள். அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

அலுவலகத்தில் சின்னச் சின்ன அலைகழிப்புகள் இருக்கும். மேலதிகாரியின் குறை, நிறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டாம். பணிகளை கொஞ்சம் போராடித்தான் முடிக்க வேண்டி வரும். சக ஊழியர்களின் கடின உழைப்பால் தடைப்பட்ட வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஆனாலும், தன் நிலையை தக்க வைத்துக் கொள்ள கொஞ்சம் போராட வேண்டி வரும். சம்பள பாக்கி கைக்கு வரும். உயரதிகாரிகளின் பார்வை உங்கள் மீது திரும்பும். இடமாற்றம் சாதகமாகும்.

விரும்பிய கல்வி நிறுவனத்தில் விரும்பிய கல்விப் பிரிவில் சேர்வீர்கள். அறிவாற்றல் கூடும். சின்னச் சின்ன தவறுகளைத் திருத்திக்கொள்ளுங்கள். நட்பு வட்டம் விரிவடையும். சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவு பெறுங்கள்.




நடுநிலை தவறாமல் இருப்பவர்களே!

உங்கள் ராசிக்கு ஜன்ம குருவாக இருந்த குருபகவான், 04.10.2018 முதல் 28.10.2019 வரை தனஸ்தானத்தில் அமர்வதால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். மனக்கசப்பின் காரணமாக விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். முக்கியப் பிரமுகர்களின் நட்பு கிடைக்கும். உங்களுடன் இருப்பவர்களைப் புரிந்துகொள்வீர்கள். விலையுயர்ந்த தங்க நகைகளை வாங்குவீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நல்ல வேலை அமையும். நீண்டநாள்களாகப் போக நினைத்த புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தந்தையாருடன் இருந்த மோதல்கள் விலகும். அவரின் ஆரோக்கியமும் சீராகும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

குரு உங்கள் ராசிக்கு 6ம் வீட்டைப் பார்ப்பதால், கடன் பிரச்னை கட்டுப்பாட்டுக்குள் வரும். பெரிய நோயிலிருந்து விடுபடுவீர்கள். குரு 8ம் வீட்டைப் பார்ப்பதால் வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். ஷேர் மூலம் பணம் வரும். குரு 10ம் வீட்டைப் பார்ப்பதால் பெரிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். உங்கள் கல்வித் தகுதிக்கேற்ப நல்ல வேலை கிடைக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடியும்.

4.10.18 முதல் 20.10.18 வரை உங்கள் ராசிக்கு 3 மற்றும் 6ம் வீடுகளுக்கு உரிய குருபகவான், தன் சாரமான விசாக நட்சத்திரத்தில் செல்வதால், உங்களைப் பற்றிய வதந்திகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதைத் தவிர்க்கவும். உங்களின் தனித்தன்மையை இழந்துவிடாதீர்கள்.

21.10.18 முதல் 19.12.18 வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், புதிய யோசனைகள் பிறக்கும். பிள்ளைகளால் சொந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். புது வேலை கிடைக்கும். தாயார் மற்றும் தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். பிறமொழியினர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பூர்வீகச் சொத்தால் வருமானம் வரும்.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், பணவரவு உண்டு. புது வீடு கட்டத் தொடங்குவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். தந்தை மற்றும் தந்தைவழி உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி உண்டாகும். பிதுர்வழி சொத்து கைக்கு வரும்.

13.3.19 முதல் 18.5.19 வரை அதிசாரத்தில் ராசிக்கு 3ம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், தலைச்சுற்றல், அடிவயிற்றில் வலி, வீண் பழி வந்து செல்லும். சட்டத்துக்குப் புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் அதிகமாகும்.

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்வதால், கொஞ்சம் சிக்கனமாக இருக்கவும். குடும்ப விஷயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டாம். அடிக்கடி தூக்கம் குறையும். நண்பர்களுடன் மனவருத்தம் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இடையிடையே பணவரவுடன், வி.ஐ.பி.க்களின் அறிமுகமும் கிடைக்கும்

வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. புது முதலீடு செய்து வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். வேலையாள்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள். புது வாடிக்கையாளர்களின் வருகையால் உற்சாகமடைவீர்கள். சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். சொந்த இடத்துக்கு கடையை மாற்றி அழகு படுத்துவீர்கள். சங்கம், இயக்கம் இவற்றில் கௌரவப் பதவிகள் தேடி வரும். ஹார்டுவேர், இரும்பு, வாகனம், மூலிகை வகைகளால் லாபமடைவீர்கள். அரசாங்கத்தால் இருந்த நெருக்கடிகள் நீங்கும். விலகிச் சென்ற பங்குதாரர் மீண்டும் இணைவார்.

பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும். உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். உயர் அதிகாரிகளின் மனநிலை அறிந்து செயல்படத் தொடங்குவீர்கள். அலுவலகத்தில் முக்கியத்துவம் கிடைக்கும். சக ஊழியர்களிடம் மதிப்பு மரியாதை உயரும். உங்கள் மீது தொடுக்கப்பட்ட அவதூறு வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும்.

நினைவாற்றல் அதிகரிக்கும். படிப்பில் இருந்த அலட்சியப் போக்கு மாறும். தேர்வுகளில் கூடுதல் மதிப்பெண்கள் பெறுவீர்கள். சக மாணவர்களின் பாராட்டுகள் கிடைக்கும்.




சத்தியத்தைப் போற்றி நடப்பவர்களே! இதுவரை உங்கள் ராசிக்கு விரயத்தில் இருந்த குருபகவான், 04.10.2018 முதல் 28.10.2019 வரை உங்கள் ராசிக்குள் ஜன்ம குருவாக அமர்வதால், பொறுப்புகள் அதிகரிக்கும். வேலைச்சுமை கூடும். ஒரு தேடலும், நிம்மதியற்ற போக்கும் ஏற்பட்டு நீங்கும். அதிகாரத்தில் இருப்பவர்களுடன் மோதல் போக்கு ஏற்படும். அடிக்கடி கோபவசப்படுவீர்கள். வாக்குறுதிகளைத் தந்து நிறைவேற்ற முடியாமல் கஷ்டப்படுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மன உளைச்சல் காரணமாக உறக்கம் குறையும். குடும்ப விஷயத்தில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்கவேண்டாம்.

அடிக்கடி அவநம்பிக்கையும் தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டு நீங்கும். வீண் சந்தேகம், ஈகோ பிரச்னையால் கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்களிடையே உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகரிக்கும். தான் தோற்றுவிடுவோமோ என்று அடிக்கடி நினைத்து ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்கள் தன்னிடம் உண்மையான பாசம் காட்டவில்லையோ என்று சந்தேகப்படுவீர்கள். பிள்ளைகளின் எதிர்பார்ப்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்கு எந்த வகையிலும் ஜாமீன் கொடுக்கவேண்டாம். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். உங்கள் இயல்புக்கு மாறாமல் நடந்துகொள்ளவேண்டாம்.

குரு உங்கள் ராசிக்கு 5ம் வீட்டைப் பார்ப்பதால் குழந்தை பாக்கியம் உண்டு. பூர்வீகச் சொத்துப் பிரச்னைகள் தீரும். சிலர் தங்களது பங்கை விற்று நகரத்தை ஒட்டி இடம் வாங்குவீர்கள். தியானம், பொதுச் சேவையில் மனம் ஈடுபாடு கொள்ளும். மகளுக்கு நல்ல வரன் அமையும். குரு 7ம் வீட்டைப் பார்ப்பதால் தள்ளிப் போன திருமணம் கூடி வரும். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே சச்சரவு ஏற்பட்டாலும் பாசம் குறையாது.

4.10.18 முதல் 20.10.18 வரை குருபகவான், தன் சாரமான விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், பணப்புழக்கம் அதிகரிக்கும். வி.ஐ.பி.களின் தொடர்பு கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும்.

21.10.18 முதல் 19.12.18 வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், வேலைச்சுமையால் பதற்றப்படுவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியாமல் போனாலும் எதிர்பாராத காரியங்கள் முடிவடையும். வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இளைய சகோதர வகையில் சங்கடங்கள் வரும். அநாவசிய செலவுகளைத் தவிர்ப்பது அவசியம். சிலர் பழைய வீட்டை இடித்துக் கட்டுவீர்கள். வாகனம் வாங்குவீர்கள்.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், மற்றவர்களுக்காக ஜாமீன் கொடுக்க வேண்டாம். உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துப் பராமரிப்பு செலவுகள் ஏற்படும். தொண்டை புகைச்சல், சளித் தொந்தரவு, மறைமுக நெருக்கடிகள் வந்து செல்லும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். அயல்நாட்டிலிருப்பவர்கள் உதவுவார்கள். நட்பு வட்டம் விரியும்.

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் உங்கள் ராசிக்கு 2ல் அதிசாரத்தில் செல்வதால் திடீர் பணவரவு உண்டு. அரசால் ஆதாயமடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை அமையும். திருமண முயற்சிகள் சாதகமாகும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உங்களை விட வயதில் குறைந்தவர்கள் மூலமாக ஆதாயமடைவீர்கள். அரசு காரியங்கள் உடனே முடியும். வீடு கட்ட ப்ளான் அப்ருவல் கிடைக்கும்.

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்வதால், நீண்ட நாள் கனவுகள் நனவாகும். வி.ஐ.பி. ஒருவரின் அறிமுகம் திருப்புமுனையை உண்டாக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். ஊர் பொது நிகழ்ச்சிகளையெல்லாம் முன்னின்று நடத்துவீர்கள்.

வியாபாரத்தில் சிந்தித்து முதலீடு செய்யவும். புதிதாக வரும் போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறுவீர்கள். சின்ன சின்ன நஷ்டங்களும், ஏமாற்றங்களும் இருக்கத்தான் செய்யும். பழைய சரக்குகளைப் போராடி விற்பீர்கள். யாருக்கும் முன் பணம் தந்து ஏமாற வேண்டாம். தெரியாத தொழிலில் இறங்க வேண்டாம். கூட்டுத் தொழிலை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது.

உத்தியோகத்தில் நாளுக்கு நாள் வேலைச்சுமை கூடிக் கொண்டே போகும். அலுவலக ரகசியங்களை வெளியே சொல்ல வேண்டாம். உங்களின் திறமையை பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவார்கள். நீங்கள் எவ்வளவு உழைத்தாலும் நற்பெயர் கிடைக்காது. உங்களைப் பற்றிய வதந்திகளை சிலர் பரப்புவார்கள். முறைபடி தேர்வெழுதி வெற்றி பெற்றும் பதவி உயர்வு, சலுகைகள், சம்பள உயர்வு பெற போராட வேண்டி இருக்கும்.




உழைப்புக்கு முக்கியத்துவம் தருபவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் இருந்த குருபகவான் 4.10.18 முதல் 28.10.19 வரை உங்கள் ராசிக்கு விரயஸ்தானமான 12ல் அமர்கிறார். வேலைச்சுமையும் அலைச்சலும் அதிகரித்தபடி இருக்கும். செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். பிரசித்தி பெற்ற புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வீட்டைப் புதுப்பித்துக் கட்ட வங்கிக் கடன் கிடைக்கும். உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் செலவுகள் அவசியமான செலவுகள் ஏற்பட்டபடி இருக்கும். குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும், அவற்றைப் பெரிதுபடுத்தவேண்டாம்.

பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் பொறுமையுடன் அனுசரித்துச் செல்லவும். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட பயணங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். மனதில் பட்டதைப் பேசி மற்றவர்களின் மனக்கசப்புக்கு ஆளாக நேரிடும் என்பதால் கவனம் தேவை. பழைய கடன்களால் சில பிரச்னைகளை சந்திக்க நேரிடும். மகனின் கல்வி, வேலை பற்றிய கவலை வந்து செல்லும். மகளுக்கு வரன் தேடும்போது நன்றாக விசாரித்து முடிவு செய்யவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. மற்றவர்களுக்கு அநாவசிய வாக்குறுதி எதுவும் தரவேண்டாம்.

குருபகவானின் பார்வைப் பலன்கள்:

குரு உங்கள் சுகஸ்தானத்தை பார்ப்பதால் தாயாரின் உடல் நிலை சீராகும். அடிக்கடி பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். நல்ல காற்றோட்டம், குடிநீர் உள்ள வீட்டுக்கு மாறுவீர்கள். சிலர் வேறு ஊருக்கு மாறிச் செல்வீர்கள். குரு 6ம் வீட்டைப் பார்ப்பதால் பழைய கடனில் ஒருபகுதியைத் தந்து முடிக்க வழி கிடைக்கும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

குரு 8ம் வீட்டைப் பார்ப்பதால் ஆயுள், ஆரோக்கியம் கூடும். வழக்குகள் சாதகமாகும். ஷேர் மூலம் பணம் வரும்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:

4.10.18 முதல் 20.10.18 வரை குருபகவான், தன் சாரமான விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், எதிர்பார்த்த காரியங்கள் உடனே முடியும். பணவரவு உண்டு. நவீன டிசைனில் ஆபரணங்கள் வாங்குவீர்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். தாயார், தாய்மாமன், அத்தை வழியில் ஆதரவு பெருகும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

21.10.18 முதல் 19.12.18 வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், அவ்வப்போது உணர்ச்சிவசப்படுவீர்கள். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தைத் தந்து முடிப்பீர்கள். தைரியம் கூடும். இளைய சகோதர வகையில் மனத்தாங்கல் வந்தாலும் பாசம் குறையாது. வேற்றுமொழி பேசுபவர்கள், வேற்று மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டில் இருப்பவர்களுடன் சேர்ந்து புது வியாபாரம் தொடங்குவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், வேலைச்சுமை, எதையோ இழந்ததைப் போல் ஒரு வித கவலைகள், தாழ்வுமனப்பான்மை, பிறர் மீது நம்பிக்கையின்மை வந்து செல்லும். புதிதாக அறிமுகமாகும் நபர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். பால்ய நண்பர்களுடன் மனத்தாங்கல் வரும்.

குருபகவானின் அதிசார சஞ்சாரம்:

13.3.19 முதல் 18.5.19 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்குள்ளேயே கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் வீண விரயம், ஏமாற்றம், கை, கால், மூட்டு வலி, மனக்குழப்பம் வந்து நீங்கும். உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

குருபகவானின் வக்ர சஞ்சாரம்:

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்வதால், கொஞ்சம் அலைச்சலும், ஏமாற்றங்களும் இருக்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்துகொள்வார்கள். எதிர்பார்த்த காரியங்கள் தடையின்றி முடியும். வி.ஐ.பி.கள் அறிமுகமாவார்கள். சொத்து வாங்க வங்கிக் கடன் கிடைக்கும். கல்யாண முயற்சிகள் சாதகமாகும். வீடு கட்டுவீர்கள்.

வியாபாரிகளுக்கு:

வியாபாரத்தில் புதிய அனுபவங்கள் கிடைக்கும். தேங்கியிருக்கும் சரக்குகளை தள்ளுபடி விலைக்கு விற்று முடிப்பீர்கள். வேலையாள்கள் ஒத்துழைப்பு தந்தாலும் அவ்வப்போது முரண்டு பிடிப்பார்கள். புதிதாக அறிமுகமாகும் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். கடையையும் நவீனமயமாக்குவீர்கள். இரும்பு, உணவு, ரியல் எஸ்டேட், பதிப்பகம், சிமெண்ட் வகைகளால் லாபம் கிடைக்கும்.




தாய்நாட்டுப் பற்று மிக்கவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 10ல் இருந்த குருபகவான், *4.10.18 முதல் 28.10.19* வரை ராசிக்கு லாபவீட்டில் அமர்ந்து பலன் தரவுள்ளார். கடினமான காரியங்களையும் எளிதாக முடித்து வெற்றி பெறுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தைத் தந்து முடிப்பீர்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு கிடைக்கும். பிரபலங்கள், அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தடைப்பட்டிருந்த வீடு கட்டும் பணியை மறுபடியும் தொடங்குவீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

மூத்த சகோதர வகையில் இருந்த மனக்கசப்பு நீங்கும். நல்ல வேலை கிடைக்கும். உங்களை உதாசீனப் படுத்தியவர்கள் வலிய வந்து பாராட்டுவார்கள். தடைப்பட்ட திருமணம் கூடி வரும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் உங்கள் மதிப்பு உயரும். அரசாங்கக் காரியங்கள் நல்லபடி முடியும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்து நட்பு பாராட்டுவார்கள். செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும். வழக்குகள் சாதகமாக முடியும். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

உங்கள் ராசிக்கு 3ம் வீட்டைப் பார்ப்பதால் மனோபலம் கூடும். தைரியமாக முடிவுகள் எடுக்கத் தொடங்குவீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். இளைய சகோதர வகையில் அனுகூலம் உண்டு. டி.வி., ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின் போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள்.

குரு 5ம் வீட்டைப் பார்ப்பதால் குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகன் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார். குடும்பத்தினருடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை செலுத்துவீர்கள்.

குரு ராசிக்கு 7ம் வீட்டைப் பார்ப்பதால் சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். பணவரவு உண்டு. புதிய திட்டங்கள் நிறைவேறும். வாழ்க்கைத்துணை வழியில் ஆதாயமடைவீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

*4.10.18 முதல் 20.10.18* வரை குருபகவான், தன் சாரமான விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், அவ்வப்போது பலவீனமாக இருப்பதாக நினைப்பீர்கள். சிலரை நம்பி பணம் கொடுத்து ஏமாறுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. அவசர முடிவுகள் வேண்டாம். சிலர் உங்களை தூண்டிவிட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

*21.10.18 முதல் 19.12.18* வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தைத் தந்து முடிப்பீர்கள். பேச்சில் முதிர்ச்சி தெரியும். புது வேலை கிடைக்கும். சங்கம், இயக்கம் இவற்றில் சேர்ந்து சேவை செய்வீர்கள். போட்டிகளில் வெற்றி உண்டு.

*20.12.18 முதல் 12.3.19* வரை மற்றும் *9.8.19 முதல் 27.10.19* வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், ஷேர் மூலம் பணம் வரும். பழைய நண்பர்கள், உறவினர்கள் தேடி வருவார்கள். பூர்வீகச் சொத்தில் பராமரிப்புப் பணிகள் செய்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்படும். தந்தைவழியில் உதவிகள் உண்டு. சொந்தங்கள் மத்தியில் கௌரவம் கூடும்.

*13.3.19 முதல் 18.5.19* வரை அதிசாரத்தில் உங்கள் ராசிக்கு 12ல்கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், திடீர்ப் பயணங்களால் அலைச்சல், செலவுகள் இருக்கும். கனவுத் தொல்லையால் தூக்கம் குறையும். சுபச் செலவுகளும் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

*10.4.19 முதல் 18.5.19* வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் *19.5.19 முதல் 8.8.19* வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்வதால், சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். பணவரவு உண்டு. வீடு கட்ட, வாங்க வங்கிக் கடன் கிடைக்கும். மகளுக்குத் திருமணம் கூடி வரும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம்.

வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சந்தை நிலவரத்தை அறிந்துகொண்டு குறைந்த முதலீடு செய்து லாபம் ஈட்டுவீர்கள். வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். புதிய கிளைகள் தொடங்குவீர்கள். அனுபவமிக்க வேலையாள்களை பணியில் அமர்த்துவீர்கள். முக்கிய பிரமுகர்களின் அறிமுகத்தால் வெளிநாட்டு நிறுவனத்தின் ஒப்பந்தம் கிடைக்கும். ஷேர், ஸ்பெக்குலேஷன், இரும்பு, கட்டட உதிரி பாகங்களால் லாபமடைவீர்கள். நல்ல பங்குதாரர் வர வாய்ப்பிருக்கிறது.

அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை ஏற்படும். அலுவலக சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள். உங்களுக்கு எதிராகச் செயல்பட்ட அதிகாரி மாற்றப்படுவார். மூத்த அதிகாரிகள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு முக்கிய முடிவு எடுப்பார்கள்.




சிந்தித்துச் செயல்படுபவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 9ல் இருந்த குருபகவான், *4.10.18 முதல் 28.10.19* வரை 10ல் அமர்ந்து பலன் தரவுள்ளார். ஓரளவு நன்மையே உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டில், வெளி மாநிலத்தில் வேலை அமையும். யாருக்கும் அநாவசிய வாக்குறுதி தரவேண்டாம். ஒரே நேரத்தில் பல வேலை களைப் பார்க்க நேரிடுவதால், எதை முதலில் முடிப்பது என்ற குழப்பம் ஏற்படும். அடிக்கடி தர்ம சங்கடமான சூழ்நிலைக்கு ஆளாவீர்கள். உங்கள் திறமையை மற்றவர்கள் பயன்படுத்தி முன்னேறு வார்கள். எந்த வேலையையும் நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது.

அடிக்கடி தன்னம் பிக்கை குறையும். தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் ஏற்படும். உறவினர்கள் சிலர் உங்களிடம் அலட்சியமாக நடந்துகொள்வார்கள். கௌரவக் குறைவான நிகழ்ச்சிகள் நடைபெறும். சின்னச் சின்ன அவமானங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலர் உங்கள் மீது வீண்பழி சுமத்துவார்கள். விலையுயர்ந்த பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். மற்றவர்களை எளிதில் நம்பி ஏமாறவேண்டாம். முக்கியமான விஷயங்களில் சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது.

குரு உங்கள் ராசிக்கு 2ம் வீட்டைப் பார்ப்பதால் எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். சொத்து சேரும்.

குரு ஏழாம் பார்வையால் 4ம் வீட்டைப் பார்ப்பதால் தாயாருடன் இருந்த மனவருத்தம் நீங்கும். வீடு கட்ட வங்கிக் கடன் கிடைக்கும். கணவன் மனைவி மனம் விட்டுப் பேசி முடிவு எடுப்பீர்கள். நவீன ரக வாகனம், செல்போன் வாங்குவீர்கள். கல்யாண முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணை வழியில் செல்வாக்கு உயரும்.

குரு 6ம் வீட்டைப் பார்ப்பதால், தடைப்பட்ட காரியங்கள் முடிவடையும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

*4.10.18* முதல் *20.10.18* வரை குருபகவான், தன் சாரமான விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், கடனாகக் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வீட்டை விரிவு படுத்துவது, அழகு படுத்துவது போன்ற முயற்சிகள் நல்லபடி முடியும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும். புதுப் பொறுப்புகள், பதவிகள் தேடி வரும். செலவுகளும், வேலைச்சுமையும் இருந்தபடி இருக்கும். மூத்த சகோதர வகையில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும்.

*21.10.18* முதல் *19.12.18* வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், திடீர் செல்வாக்கு, யோகம், பணவரவு உண்டாகும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். வேற்றுமொழியினர், மாநிலத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். புதிய நண்பர்களால் உற்சாகமடைவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

*20.12.18* முதல் *12.3.19* வரை மற்றும் *9.8.19* முதல் *27.10.19* வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். பிள்ளைகளால் சொந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பூர்வீகச் சொத்தை சீர் செய்வீர்கள். மகனின் உயர்கல்வி, உத்தியோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாகும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

*13.3.19* முதல் *18.5.19* வரை அதிசாரத்தில் உங்கள் ராசிக்கு 11ல்கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், செல்வம், செல்வாக்கு கூடும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புதுப் பதவி, பொறுப்புகள் தேடி வரும்.

*10.4.19* முதல் *18.5.19* வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் *19.5.19* முதல் *8.8.19* வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்வதால், திடீர் பயணங்களும், செலவுகளும் துரத்தும். தர்மசங்கடமான சூழ்நிலைக்கு ஆளாவீர்கள். பால்ய நண்பர்களுடன் மோதல்கள் வரும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். பழைய பிரச்னைகள் மீண்டும் வந்துவிடுமோ என்ற பயம் வந்து போகும். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். இடையிடையே பணவரவு உண்டு. வீடு, மனை வாங்குவது, விற்பது நல்ல விதத்தில் முடியும்.

வியாபாரத்தில் அதிரடி மாற்றங்கள் செய்து லாபம் ஈட்டுவீர்கள். வேலையாள்கள் முரண்டு பிடிப்பார்கள். தொழில் போட்டி அதிகமாகும். வாடிக்கையாளர்களிடம் கனிவாக நடந்துகொள்ளுங்கள். பழைய நிறுவனங்களைக் காட்டிலும் புதிய நிறுவனங்களின் பொருட்களை விற்பதன் மூலமாக அதிக ஆதாயமடைவீர்கள். கடையை விரிவுபடுத்த லோன் கிடைக்கும். சிமெண்ட், கணிணி உதிரி பாகங்கள், ரியல் எஸ்டேட், எண்டர்பிரைசஸ் வகைகளால் லாபமடைவீர்கள்.

உத்தியோகத்தில் உண்மையாக இருப்பது மட்டும் போதாது உயரதிகாரிகளுக்கு தகுந்தாற்போல் பேசும் வித்தையையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள்.




ன்னம்பிக்கையுடன் சாதிப்பவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 8ல் அமர்ந்து பாடாய்ப்படுத்திய குருபகவான், 4.10.18 முதல் 28.10.19 வரை 9ல் அமர்ந்து பலன் தரவிருக்கிறார். புது வியூகங்களை அமைத்துக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். தொட்ட காரியங்கள் துலங்கும். புது முயற்சிகள் சாதகமாக முடியும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். தினமும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்குக் கிடைக்கும். தந்தையுடன் இருந்து வந்த மோதல் போக்கு மாறும். தந்தைவழி சொத்துகள் சேரும். குடும்பத்தில் நிலவி வந்த சண்டை, சச்சரவுகள் நீங்கும். தடைப்பட்ட திருமணம் கூடிவரும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

பேச்சில் அனுபவ அறிவு பளிச்சிடும். கல்வியாளர்களின் நட்பு கிடைக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சி வெற்றி பெற உதவி செய்வார். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். மகனுக்கு வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை அமையும். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நீண்டநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் விருப்பம் இப்போது நிறைவேறும். ஒதுங்கியிருந்த சொந்தங்கள் வலிய வந்து பேசுவார்கள்.

குருபகவான் உங்கள் ராசியை பார்ப்பதால், சோகமும் சோர்வும் நீங்கி, உற்சாகமும் மகிழ்ச்சியுமாக காணப்படுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனை அடைக்க குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும். குரு 3ம் வீட்டைப் பார்ப்பதால், தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளைய சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். குரு 5ம் வீட்டைப் பார்ப்பதால், குழப்பம் தடுமாற்றம் நீங்கி தெளிவு பெறுவீர்கள். பிள்ளைகளின் கல்வி, திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும்.

4.10.18 முதல் 20.10.18 வரை குருபகவான், தன் சாரமான விசாகம் நட்சத்திரத்தில் செல்வதால், கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். புது வேலை கிடைக்கும். அலுவலகத்தில் மரியாதை கூடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும்.

21.10.18 முதல் 19.12.18 வரை குருபகவான் சனிபகவானின் அனுஷம் நட்சத்திர சாரத்தில் செல்வதால், ஷேர் மூலம் பணம் வரும். அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். வீடு, வாகன வசதி பெருகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

20.12.18 முதல் 12.3.19 வரை மற்றும் 9.8.19 முதல் 27.10.19 வரை குருபகவான் புதனின் நட்சத்திரமான கேட்டை நட்சத்திரத்தில் செல்வதால், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீடு கட்ட ப்ளான் அப்ரூவலாகி வரும். கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி சொத்து கைக்கு வரும்.

13.3.19 முதல் 18.5.19 வரை அதிசாரத்தில் உங்கள் ராசிக்கு 10ல்கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால், ஒரே நாளில் முக்கியமான இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். வீண் பழிச்சொல் வரும். மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படும்.

10.4.19 முதல் 18.5.19 வரை மூலம் நட்சத்திரத்திலும் மற்றும் 19.5.19 முதல் 8.8.19 வரை கேட்டை நட்சத்திரத்திலும் வக்ரகதியில் செல்வதால், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். உறவினர், நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். சொத்து வாங்க முன் பணம் தருவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வாழ்க்கைத்துணை உங்களின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களும் உதவியாக இருப்பார்கள்.

வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து முதலீடு செய்வீர்கள். தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். கடையை விரிவுபடுத்துவீர்கள். வேலையாள்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். ஷேர், ஸ்பெக்குலேஷன், உணவு, எண்டர் பிரைசஸ், ஜுவல்லரி, மர வகைகளால் ஆதாயமடைவீர்கள். விலகிச் சென்ற பங்குதாரர் மீண்டும் வந்து சேர்வார். மூத்த வியாபாரிகளின் ஆதரவால் புதிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் படுவீர்கள்.

உத்தியோகத்தில் உங்களைப் பற்றி குறை கூறியவர்களுக்கு இனி தகுந்த பதிலடி கொடுப்பீர்கள். தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களின் திறமையை மேலதிகாரி பாராட்டுவார். பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் உண்டு. சக ஊழியர்களும் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். சிலருக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை அமையும்.

நல்ல கல்வி நிறுவனத்தில் மேல்படிப்பைத் தொடங்குவீர்கள். மொழித் திறனை வளர்த்துக் கொள்வீர்கள். தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். இலக்கியம், ஓவியப் போட்டிகளில் பரிசும் பாராட்டும் பெறுவீர்கள்.

# இலையுதிர் காடுகள்



ஆண்டின் குறிப்பிட்ட பருவத்தில் இலைகளை உதிர்த்துவிடும் காடுகள் இலையுதிர் காடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

இக்காடுகளில் பொதுவாக கோடை காலம், மழை காலம், குளிர் காலம், இலையுதிர் காலம், வசந்த காலம் எனப் பலவித பருவகாலங்கள் காணப்படுகின்றன.

இக்காடுகளில் உள்ள மரங்கள் அகன்ற இலைகளுடன் குறிப்பிட்ட பருவத்தில் இலையை உதிர்த்து விடுவதால் இவை அகன்ற இலை இலையுதிர் காடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இக்காடுகளில் சில பருவகாலங்கள் வறட்சியாக இருப்பதால் இவை உலர்காடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இவை பொதுவாக புவியின் மிதமான மண்டலங்களில் அமைந்துள்ளன.

இக்காடுகளில் வெப்பநிலையானது மழைக்காடுகளைவிடக் குறைவாகவும், கூம்புவடிவ காடுகளைவிட அதிகமாகவும் இருக்கும்.

இக்காடுகளில் உள்ள உயிரினங்கள் இங்கு நிலவும் வெப்பநிலை மாறுபாட்டினை தாங்கி வாழக்கூடிய தகவமைப்பினைக் கொண்டுள்ளன.

இங்குள்ள தாவரங்கள் நீராவிப் போக்கினைக் குறைக்கும் பொருட்டு குறிப்பிட்ட பருவத்தில் இலைகளை உதிர்த்துவிடுகின்றன.

இங்குள்ள விலங்குகள் மற்றும் பறவைகளில் சில குறிப்பிட்ட பருவங்களில் வேறு இடங்களுக்கு இடம் பெயருகின்றன.

– வ.முனீஸ்வரன்

வேறு சில இங்கு நிலவும் பருவ மாற்றங்களை தாங்கி வாழக்கூடிய தகவமைப்புகளைக் கொண்டுள்ளன.

இலையுதிர் காடுகளின் வகைகள்

இலையுதிர் காடுகளில் நிலவும் காலநிலையைப் பொறுத்து இக்காடுகள் மிதவெப்பமண்டல இலையுதிர் காடுகள், வெப்பமண்டல ஈர இலையுதிர் காடுகள், வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

**மிதவெப்பமண்டல இலையுதிர் காடுகள்**

**அமைவிடம்**

மிதவெப்பமண்டல இலையுதிர் காடுகள் புவியின் வடஅரைக்கோளத்தில் பெருமளவு காணப்படுகின்றன.

தென்அரைக்கோளத்தில் தென்அமெரிக்கா, நியூலாந்து உள்ளிட்ட ஒரு சில நாடுகளில் மட்டும் காணப்படுகின்றன.

இக்காடுகள் ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குப்பகுதி, கிரேட்லேக் பகுதி, மத்திய மற்றும் மேற்கு ஐரோப்பிய பகுதிகள், ரஷ்யாவின் சில பகுதிகள், சீனா மற்றும் ஜப்பானின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

**காலநிலை**


இக்காடுகளில் மிதமான காலநிலை நிலவுகிறது. இங்கு குளிர்காலம் மிகவும் குளிராகவும், கோடைகாலம் வெப்பமாகவும் இருக்கும்.

இக்காடுகளில் குளிர் மற்றும் கோடை காலங்களில் நிலவும் வெப்பநிலைகளில் அதிகளவு வேறுபாடுகள் இருக்கும்.

ஆகவே இங்கு ஆண்டின் சராசரி வெப்பநிலை 10 டிகிரி செல்சியஸாக இருக்கிறது.

இக்காடுகளில் மழைப்பொழிவானது 76 முதல் 152 செமீ வரை இருக்கும். மழைப்பொழிவு இங்கு ஆண்டுமுழுவதும் இருக்கும்.

இக்காடுகளில் கோடைகாலம், இலையுதிர் காலம், வசந்த காலம், குளிர்காலம் என நான்கு பருவநிலைகளைக் கொண்டுள்ளன.



இங்கு வெப்பநிலை வசந்தத்தில் தொடங்கி கோடைகாலத்தில் உச்சநிலையை அடைகிறது. மேலும் இங்கு இலையுதிர் காலத்தில் குளிர் ஆரம்பித்து குளிர்காலத்தில் உச்சமாகிறது.

இக்காடுகளில் உள்ள மரங்களின் இலைகள் இலையுதிர் காலத்தில் நிறம் மாறி உதிர ஆரம்பிக்கின்றன. குளிர்காலத்தில் இக்காட்டு மரங்கள் இலைகளை முற்றிலும் உதிர்த்து விடுகின்றன.

**புவியியல் கூறுகள்**

இவ்வகைக் காடுகள் மலைகள், பள்ளத்தாக்குகள், மலைச்சரிவுகள், பீடபூமிகள் ஆகிய இடங்களில் வளர்கின்றன.

இங்கு காணப்படும் மண்ணானது வளமிக்கதாக இருக்கிறது. தாவர மற்றும் விலங்கினங்கள் இறந்து மண்ணில் உள்ள நுண்ணுயிர்களால் மட்கப்பட்டு மண்ணிற்கு வளம் சேர்க்கின்றன.

ஆறுகள், நீரோடைகள், நீரூற்றுக்கள், ஏரிகள், குளங்கள் ஆகிய நீராதாரங்கள் இக்காட்டினை வளப்படுத்துகின்றன.

**உயிரினங்கள்**

இவ்வகைக் காடானது ஐந்து வகை அடுக்குகளைக் கொண்டுள்ளது. இக்காடுகவில் உள்ள அடுக்கிற்கு ஏற்றவாறு உயிரினங்கள் அந்தந்த அடுக்குகளில் காணப்படுகின்றன.

இவ்வகைக் காட்டின் முதல் அடுக்கு மரஅடுக்கு என்றழைக்கப்படுகிறது. இங்கு 60100 அடிஉயரம் உள்ள ஓக், மேப்பிள், கிக்கோரி, பீச் உள்ளிட்ட மரங்கள் காணப்படுகின்றன.

அடுத்த அடுக்கு சிறுமரஅடுக்கு என்று அழைக்கப்படுகிறது. இங்கு டாக்வுட், ரெட்பட்ஸ் உள்ளிட்ட மரங்கள் காணப்படுகின்றன.

மூன்றாவது அடுக்கு புதர் அடுக்கு என்றழைக்கப்படுகிறது. இவ்வடுக்கில் அஜிலாஸ், ரோடொடென்ரான் போன்றவை காணப்படுகின்றன.

நான்காவது அடுக்கு மூலிகை அடுக்கு என்பதாகும். இதில் காட்டுப்பூக்கள், ஃபெர்ன்ஸ் போன்றவை காணப்படுகின்றன.

கடைசி அடுக்கு காட்டுத்தரை ஆகும். இதில் லிச்சன்சுகள், மோசஸ் போன்றவை உள்ளன.

கருப்பு கரடிகள், கயோடிகள், ஓநாய்கள், எலிகள், முயல்கள், மான்கள், ஓட்டர்கள், இருவாழ்விகள், பாம்புகள், பெரிய கொம்பு ஆந்தை, பாடும் பறவை, மரங்கொத்திகள், வல்லூறுகள், பருந்துகள், நீலக்குருவி போன்றவை இங்கு உள்ளன.

## வெப்பமண்டல ஈர இலையுதிர் காடுகள்

### இலையுதிர் காடுகள்

**அமைவிடம்**

வெப்பமண்டல ஈர இலையுதிர் காடுகள் வடகிழக்கு ஆஸ்திரேலியா, கிழக்கு இந்தியா, மியான்மாரின் ஒரு சில பகுதிகள், தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**காலநிலை**

இங்கு வெப்பநிலை அதிகமாகவும், மழைப்பொழிவு சீராகவும் இருக்கும். இக்காடுகளில் கோடை காலம் வெப்பமாக இருக்கும். இக்காடுகளில் வறட்சியானது குறுகிய காலஅளவினைக் கொண்டிருக்கும்.

கோடையின் ஆரம்பத்தில் இக்காடுகள் இலைகளை உதிர்த்து விடுகின்றன. மழை தொடங்கியதும் இலைகள் மீண்டும் முளைக்க ஆரம்பிக்கின்றன.

**புவியியல் கூறுகள்**

இவ்வகைக் காடுகள் மலைச்சரிவுகளில் காணப்படுகின்றன. இக்காடுகளில் காணப்படும் மண்ணானது அவ்வளவு வளமானதாக இருப்பதில்லை.

ஏனெனில் சத்துமிக்க மேற்புற மண்ணானது

மழையில் அடித்து செல்லப்பட்டு வளம் குறைந்ததாக மாறிவிடுகிறது. மேலும்

இவ்வகைக் காட்டின் தரைப்பகுதிக்கு போதிய வெளிச்சம் கிடைக்காதல் மண்வளம் குறைந்ததாக உள்ளது.

ஆறுகள், பருவகால ஓடைகள், மழை ஆகியவை இக்காட்டினை வளப்படுத்துகின்றன.

**உயிரினங்கள்**

இவ்வகைக் காடுகளின் மரங்கள் மரப்பட்டைகளைப் பெற்றுள்ளன. தேக்கு, செம்மரம், எபினி, அரசமரம் உள்ளிட்ட மரங்கள் இவ்வகைக் காடுகளில் காணப்படுகின்றன.

கங்காருகள், யானைகள், குரங்குகள், புலிகள், நீர்எருமைகள், பாடும் பறவைகள், குராவங் பறவைகள், இருவாழ்விகள், மலைப்பாம்புகள், கலோட் பல்லிகள் காணப்படுகின்றன.

**வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகள்**

**வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகள்**

**அமைவிடம்**

வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகள் மத்திய இந்தியா, பிரேசிலின் சில பகுதிகள், அங்கோலா, தான்சானியா, சூடானின் வடக்குப்பகுதி, மேற்கு ஆப்பிரிக்கா உள்ளிட்ட இடங்களில் காணப்படுகின்றன.

**காலநிலை**

இங்கு வெப்பம் அதிகமாக இருக்கும். அதிக வெப்பத்தின் காரணமாக இங்கு மழைப்பொழிவு நிகழ்கின்றது. இக்காடுகளில் கோடை மிகவும் வறட்சியாகவும், நீண்டதாகவும் இருக்கிறது.

தான்சானியாவில் உள்ள இவ்வகைக் காடுகளில் வறட்சியானது ஏழு மாதங்கள் வரை நீடிக்கும்.

**உயிரினங்கள்**

இவ்வகைக் காடுகளின் மரங்கள் தடித்த மரப்பட்டைகளைப் பெற்றுள்ளன. சிலவகை மரங்கள் தண்டுகளில் தண்ணீரை சேமித்துக் கொள்கின்றன.

சிலவகை மரங்கள் இலைகளுக்குப் பதிலாக முட்களைக் கொண்டுள்ளன. வாட்டில், பனை, தேக்கு, அகாசியா, போபாப் உள்ளிட்ட மரங்கள் இவ்வகைக் காடுகளில் காணப்படுகின்றன.

வரிக்குதிரை, வெளிமான்கள், யானைகள், புலிகள், குரங்குகள், சிங்கங்கள், ஒட்டகசிவிங்கிகள் போன்ற விலங்கினங்களும் தூக்கணாங்குருவி, வெர்ன், ஃபால்கான்ஸ் பறவைகள், இருவாழ்விகள், பாம்புகள், அகாமா பல்லிகள் போன்ற பறவையினங்களும் இக்காடுகளில் காணப்படுகின்றன.

**இலையுதிர் காடுகளின் முக்கியத்துவம்**

இக்காடுகளில் காணப்படும் தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட உயிரினங்கள் சுற்றுசூழலை சமநிலைப்படுத்தி மனித வாழ்வை வளமாக்குகின்றன.


எடுத்துக்காட்டாக ஆக்ஸிஜன் சுழற்சி, கார்பன் சுழற்சி, நீர் சுழற்சி, ஊட்டச்சத்துக்கள் சுழற்சி போன்றவற்றைக் கூறலாம்.

இவை மனிதனுக்கு உணவு, உறைவிடம், பொருளாதாரம் போன்றவற்றை வழங்குகின்றன.

மனிதனுக்குத் தேவையான மரங்கள், பேப்பர்கள் போன்றவற்றிற்கான மூலப்பொருட்கள் இக்காட்டுகளிலிருந்து பெறப்படுகின்றன.

ஆகவே காடுகளை கண் எனப்போற்றிப் பாதுகாத்து நாம் சிறந்த சுற்றுசூழலில் வாழ்ந்து நம் சந்ததியினருக்கும் அதனை பரிசாகக் கொடுப்போம்.

# களமிறங்கிய சண்டக்கோழி-2



தேனியைச் சுற்றியுள்ள 7 ஊர்களுக்கு பொதுவான வேட்டைக் கருப்பன் கோயில் திருவிழா, இரு குடும்பங்கள் இடையிலான மோதல் காரணமாக 7 ஆண்டு களாக தடைபட்டிருக்கிறது. அந்த மோதலில் இறந்தவரின் மனைவியான வரலட்சுமி சரத் குமாரும், குடும்பத்தின் ஆண்களும் எதிராளி குடும்பத்தின் அனைத்து ஆண்களையும் கொல்கிறார்கள். அந்தக் குடும்பத்தின் கடைசி ஆண் வாரிசான ஜான் ஹரியை கொல்ல காத்திருக்கிறார்கள். இதற்கிடையில், ஊர் திருவிழாவை அமைதியாக நடத்தி முடிப்பதாக உறுதியேற்கிறார் அப்பகுதியில் செல் வாக்காக இருக்கும் ராஜ்கிரண். திருவிழாவின் போது, ஹரியை கொல்ல திட்டமிடுகிறது வரலட்சுமி தரப்பு. அவரைக் காப்பாற்றுவதாக ராஜ்கிரண் வாக்களிக்கிறார். வெளிநாட்டில் படிக்கும் அவரது மகன் விஷால் அவருக்கு துணையாக களமிறங்குகிறார். திருவிழா நல்லபடியாக நடந்ததா? ஹரி காப்பாற்றப்பட்டாரா என்பதே மீதிக் கதை.



2005ல் வெளியாகி வெற்றிபெற்ற 'சண்டக் கோழி' படத்தின் 2ம் பாகத்தை 13 ஆண்டு களுக்குப் பிறகு தந்திருக்கிறார் இயக்குநர் லிங்குசாமி. கதையைப் பொருத்தவரை, இதை முதல் பாகத்தின் தொடர்ச்சி என்று கூறமுடியாது. அதே தலைப்பு, கதாபாத்திரங் களைப் பயன்படுத்தி வேறொரு கதையை உருவாக்கியுள்ளனர். ஊர்த் திருவிழா, வில்லி கதாபாத்திரம், சாதி வன்முறை ஆகியவற்றை சேர்த்து புதுமை காட்ட முயற்சித்துள்ளனர். புகை, மது காட்சிகள் வைக்காமல் இருந்ததற்காக இயக்குநரின் அக்கறை, பொறுப்புணர்வை வரவேற்கலாம்.

முதல் பாகத்தில், சூழ்நிலையால் அடிதடி யில் இறங்கும் விஷால் இப்படத்தின் தொடக் கத்திலேயே சூப்பர் ஹீரோவாக அறிமுகமாகி றார். பரபரப்பான ஆக்சன் காட்சிகள், ராஜ்கிரண் விஷால் இடையிலான பாசம், டிரைவராக வரும் ராமதாஸின் நகைச்சுவை, விஷால் கீர்த்தி சுரேஷ் கெமிஸ்ட்ரி, திருவிழா காட்சிகள் என பார்வையாளரை சோர்வடைய வைக்காமல் படம் நகர்கிறது. இடைவேளையில் கொடுக்கப்படும் அதிர்ச்சி யும், தொடர்ந்து விஷால் எடுக்கும் அதிரடிகளும் சுவாரசியம் கூட்டுகின்றன. பல சண்டைக் காட்சிகளைக் கடந்து வன்முறைக்கு எதிரான மெஸேஜுடன் படம் நிறைவடை கிறது.

வரலட்சுமியின் மகனாக வரும் சிறுவனைக்கூட கொலைவெறி கொண்டவனாக சித்தரித் திருப்பது ஜீரணிக்க முடியாதது. ராஜ்கிரணும், விஷாலும் ஊர் மக்களால் கடவுளுக்கு





இணையாகப் போற்றப்படுவதும், கிளைமாக் ஸில் வரலட்சுமியின் குங்குமம் மழைநீரால் அழிவதுபோல காண்பிப்பதும் இந்த கால கட்டத்துக்கு பொருந்தாத விஷயங்கள்.

விஷால் முதல் பாகத்தில் இருந்தது போலவே இருக்கிறார். சென்டிமென்ட் காட்சி களில் முதிர்ச்சியான நடிப்பைத் தருகிறார். கீர்த்தி சுரேஷிடம் காதலில் விழுவது, டிரைவர் என்று நம்பும்படியாக நடிப்பது, அப்பாவுக்கு முன் சவடால் பேசியவரை ஒரே அடி யில் சாய்ப்பது, அப்பாவின் வாக்கை நிறை வேற்ற பொறுமை காப்பது, பழிவாங்கு வதிலும் அன்பைக் கையாள்வது என தேவையான நடிப்பைக் கொடுத்திருக்கிறார்.

ராஜ்கிரண் வழக்கம்போல மிடுக்கான தோற்றம், கண்ணியமான நடிப்பால் கவர்கிறார். இவர்களது சண்டைக் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன.

வாத்தியார் மகள் செம்பருத்தியாக கீர்த்தி சுரேஷுக்கு வாய் வலிக்கப் பேசும் கதாபாத்தி ரம். நாயகனைக் காதலிப்பது மட்டுமே அவ ரது ஒரே வேலை. அதை ரசிக்கத்தக்க வகை யில் செய்தாலும், ஒருசில இடங்களில் அவரது துடுக்குத்தனம் சலிப்பை ஏற்படுத்துகிறது.

பழிவாங்கும் வன்மத்தை சுமந்து திரியும் பெண் வேடத்துக்கு வரலட்சுமி கச்சிதமாக பொருந்துகிறார்.

மு.ராமசாமி, சண்முகராஜன், தென்னவன், கஜராஜ், கஞ்சா கருப்பு, ஹரீஷ் பெராடி, அர்ஜய், ஞானசம்பந்தன், மயில்சாமி, முனீஸ் காந்த் என்று ஏகப்பட்ட கதாபாத்திரங்கள் இருந்தும், அவர்கள் நடிப்பதற்கு பெரிதாக வாய்ப்பு இல்லை.

''இது ஆடு புலி ஆட்டம் இல்லை; ஆடும் புலியும் சேர்ந்து ஆடுற ஆட்டம்'', ''அருவாள பார்த்தா ஆடு பயப்படும்; அய்யனாரு பயப்படு வாரா'', ''செய்றதுன்னா சொல்றது இல்லை.. செய்றது'', ''திருவிழாவுல புலி வேஷம் போட லாம்; ஆனா புலிக்கு முன்னாடியே வேஷம் போடக்கூடாது'' என எஸ்.ராமகிருஷ்ணன், பிருந்தா சாரதியின் வசனங்கள் படத்துக்கு வலுசேர்க்கின்றன.

''இன்னைக்கும் இந்த அருவா பிடிக்குற தெம்பு இருந்தா, வாடா.. வந்து வெட்டுடா. இங்கேதான்டா இருப்பேன், இந்த மண்லதான்டா இருப்பேன்'' என்று விஷால் சவால் விடுவதே முதல் பாகத்தின்



கிளைமாக்ஸ். இப்படத்தின் தொடர்ச்சியை அங்கிருந்து தொடங்கியிருக்கலாம். அப்படி ஒரு முக்கிய காட்சியை தவற விட்டுள்ளனர்.

யுவன்ஷங்கர் ராஜாவின் இசையில் ‘கம்பம் பொண்ணு’ பாடல் கவனம் ஈர்க்கிறது. பின்னணி இசை சிறப்பு. கே.ஏ.சக்திவேல் ஒளிப்பதிவில் தேனி பகுதியின் வெக்கையையும், புழுதிக் காற்றையும் உணரமுடிகிறது. திருவிழாக் காட்சிகளில் கலை இயக்குநரின் பங்களிப்பு பிரமிக்க வைக்கிறது. சண்டைப் பயிற்சியாளரின் பங்களிப்பும் பாராட்டுக்குரியது.

ஹரியைக் காப்பாற்றுவது, திருவிழாவை தடையின்றி நடத்தி முடிப்பது மட்டுமே திரைக்கதைக்கான முடிச்சுகளாக இருப்பதால் சுவாரசியமும், விறுவிறுப்பும் ஒருகட்டத்தில் குறையத் தொடங்குகிறது. வேட்டைக் கருப்புக்கு அஞ்சாதவர்கள் 7 ஆண்டுகளாக ஏன் அமைதியாக இருக்கிறார்கள்? ஹரியின் கழுத்தில் துண்டுபோடும் அர்ஜய் அப்போதே அவரை பழிவாங்காதது ஏன்? கலெக்டரான பிறகும் ஹரி அமைதியாக இருப்பது ஏன் என்ற கேள்விகளுக்கு பதில் இல்லை. புதுமையாக ஏதும் இல்லாவிட்டாலும், காதல், ஆக்சன், சென்டிமென்ட், நகைச்சுவை என்று ஒரு கமர்ஷியல் கலவையாக ஓரளவு திருப்திப்படுத்துகிறது ‘சண்டக்கோழி 2’.


■

- க.தங்கமணி

# தொடர்

என் பாட்டி
என் தாய்
நான்
என் மகள் என
ஆண்டாண்டு காலமாய்
இது தொடர்ந்தவாறேதான்
இருக்கிறது

விடிவதற்குள்
நாங்கள் விழிப்பதற்கு
இதுவும்தான் காரணம்
இருட்டுதான்
எங்களுக்கான
கழிவறையைக்
கட்டித்தருகிறது.
□



# மௌனத்தின் தாலாட்டு

- சிங்கப்பூர் முஹைதீன்

மௌனமான
இந்தப் பொழுதை
மௌனமாகவே
கழிக்க விரும்புகின்றேன்.
நிசப்தத்தின் தாலாட்டில்
சற்றே கண்ணுறங்க
விரும்புகின்றேன்.
தேடலின் உளிகளால்
என்னைச் சிதைத்துச்
செதுக்க விரும்புகின்றேன்.
மௌனத்தின்
இரைச்சல்களில்
என்னை மறக்க
விரும்புகின்றேன்...



## வறட்சி

கண்ணீர் வடிக்க மறுக்கும்
என் கண்களுக்குத் தெரியும்.
சிந்துவதைவிடச்
சிந்திப்பதே மேல் என்று.
யார் சொன்னது
வறட்சி கொடியதென்று?

செந்நீர் வடிக்க முடியாத
பசித்த அகதிக்குத் தெரியும்.
சிந்துவதைவிடச்
செத்து மடிவதே மேல் என்று.
யார் சொன்னது
வறட்சி கொடியதென்று?

## விலை

விலை வைத்தாயே
நான் காட்டிய அன்புக்கு.
புறக்கணிப்பு.

விலை வைத்தாயே
வரைந்த கோலத்திற்கு.
கதவடைப்பு.

விலை வைத்தாயே
போ என்ற என் சொல்லுக்கு.
ஒத்துழைப்பு.



# காந்தியின் மௌனம்

மௌனம் எனும் சாத்வீகக் குணத்தை மற்றவர்களுக்கும் போதித்தார் காந்தி.

மவுனம், மௌனம், மோனம் என்று தமிழில் பலவிதமாக எழுதப்படும் இது, அமைதி, பேச்சற்ற நிலை என்னும் பொருள்களிலேயே பெரும்பாலும் பயன்பாட்டில் உள்ளது. மவுனத்தைப் பின்பற்றுபவர் மவுனி, மௌனி, மோனர் எனப்பட்டார்கள். அவர்களே முனி, முனிவர்களாயிருக்கலாம். அபிதான சிந்தாமணி மௌனம் என்பதற்கு மோனம் என்ற பொருளைத் தருகிறது. மோனம் என்பதற்கான அகராதிப் பொருள், மௌனம் என்ற குறிப்புடன் சாத்விக குணத்தொன்று என்றும் உள்ளது. அருள், ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறுமை, மேன்மை, மோனம், வாய்மை என்று வழங்கப்படும் எட்டு குணங்களின் மொத்தமே சாத்விகம். யோசித்துப் பார்த்தால், சாத்விகத்தின் முழு உருவமாகவே திகழ்ந்தவர் காந்தி என்று தோன்றியது. அந்நியர்களிடமும் அருளைப் பொழிந்தார்; ஐம்பொறி ஆட்சி கொண்டார்; ஞானமயமாகவே காட்சி

தந்தார்; தவம் இருந்தார்; பொறுமை அவரது அணிகலன்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது; மேன்மைமிக்கிருந்தார்; வாய்மை அவரது வாழ்க்கையின் செய்தியாக ஒளிர்ந்தது. ஆக சாத்விகத்தின் நடமாடும் அடையாளமாகவே காந்தி விளங்கினார். மௌனம் என்கிற சாத்விக குணத்தை காந்தி எங்கிருந்து கண்டடைந்தார்?

**மௌன எண்ணம் தோன்றிய இடம்**

'யங் இந்தியா'வில் (8 ஆகஸ்ட் 1925) எழுதிய ஒரு குறிப்பிலிருந்து மௌனம் காத்தலைப் பற்றிய எண்ணம் அவரது இந்திய வருகைக்கு முன்பே அதாவது 1915க்கு முன்பே காந்திக்குத் தோன்றிவிட்டது தெரிகிறது.

"தென்னாப்பிரிக்காவில் ஒருமுறை டிராப்பிஸ்ட் துறவி (கத்தோலிக்க கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர்கள்) மடத்திற்குச் சென்றிருந்தேன். அது ஒரு ரம்மியமான இடம். அம்மடத்தைச் சார்ந்த பெரும்பாலான துறவிகள் மௌன விரதம் பூண்டிருந்தனர். அதன் உட்கருத்து என்ன என்று பேராயரைக் கேட்டேன். வெளிப்படையான காரணம்தான் என்று கூறி இவ்வாறு விளக்கினார்.

'மானிடர்களாகிய நாம் உறுதியற்றவர்கள்; பிழை செய்யக்கூடியவர்கள் நாம் என்ன பேசுகிறோம் என்று பெரும்பாலும் நமக்கே தெரிவதில்லை. நம் உள்ளத்தே எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் அலைவற்ற மெல்லிய குரலை நாம் கேட்க விரும்பினால், நாம் ஓயாது வாய்விட்டுப் பேசிக் கொண்டே இருக்கும்போது அவ்வான்மக் குரல் நமக்குக் கேட்காது' என்றார் பேராயர். அது எனக்குக் கிடைத்த ஓர் பொன்னான படிப்பினை" என்று எழுதினார் காந்தி.

சித்தம் மவுனம் செயல்வாக்கு எல்லாம் மவுனம்

சுத்த மவுனம் என்பால் தோன்றின் பராபரமே

என்று பாடுகிறார் தாயுமானவர்.

சித்த மவுனம் (அறிவு மௌனம்), செயல் மௌனம், வாக்கு மவுனம் (சொல் மௌனம்) ஆகியவை தன்னிடம் அமைந்துவிட்டால் முழுமையான மௌனம் தன்பால் கவிந்துவிடும் என்கிறார் தாயுமானவர். மனத்தால், செயலால், வாக்கால் மௌனமாகிற நிலை, கற்பனைக்கெட்டாத சமாதி நிலை. இம்மூன்றுள் வாக்கு மௌனத்தையே பெரும்பாலும் இன்று நாம் அனுசரிக்கிறோம். காந்தியும் வாக்கு மௌனத்தையே கடைபிடித்தார். மௌன காலத்தில் அவர் சிந்தித்தார்; கருத்தைப் பென்சிலால் எழுதி அருகிருந்தவரிடம் காண்பித்து ஒருவகையில் செயல்படவும் செய்தார்.

கடவுள் மட்டுமே மவுனத்தை அருள முடியும் என்று தாயுமானவர் கெஞ்ச, பெர்சிய ஞானி ரூமி "மௌனம் கடவுளின் மொழி. நாம் பேசுபவை எல்லாம் தரமற்ற மொழிபெயர்ப்புகள்" என்கிறார்.

**கடவுளின் மொழி**

கடவுளின் மொழி மௌனமானால் அந்த மௌனத்தை எப்படிப் பேசுவது, அதாவது மௌனத்தைக் கடைபிடிப்பது எப்படி? காந்தி சொல்கிறார்.

"வாயை இறுக மூடிக்கொண்டு பேசாமலிருக்கும் மௌனம் உண்மையில் மௌனம் ஆகாது. நாக்கை அறுத்துக்கொண்டுவிட்டால்கூட அதேபோல் பேசாமல் இருந்துவிட முடியும். அது மௌனம் ஆகுமா? பேசும் திறமை இருந்தும் வீணிலே வார்த்தையாடாமல் இருப்பவர்களே மெய்யான மௌனி" (ஹரிஜன், 24 ஜூன் 1933).

"உங்கள் பேச்சு மௌனத்தை மேம்படுத்துமானால் அப்போது மட்டும் நீங்கள் பேசலாம்" என்பது காந்தியின் இன்னொரு அறிவுரை.

அயலவர் ஆதிக்கத்திலிருந்து இந்தியர்களை விடுவிக்க சத்யாக்கிரகம் என்ற முதல் ஆயுதத்தை காந்தி ஏந்தினார். அது ஒத்துழையாமையாகவும் சட்டமறுப்பாகவும் வடிவம் கொண்டது. காந்தியின் இரண்டாவது போராட்ட ஆயுதம் தன்னை வருத்திக் கொண்ட உண்ணாவிரதம். மௌனம்

காந்தியின் இன்னொரு போராட்ட ஆயுதம். இந்த மௌன ஆயுதத்தைக் கொண்டு அவர் தன்னுடனே போரா டினார். மனசாட்சியின் முன்னிலையில் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ள இந்த ஆயுதத்தைக் கையாண்டார்.

## மௌன நாளின் தேவை

உங்கள் மௌன நாளின் உட்கருத்து என்ன? என்று அவரது வாழ்க்கையை எழுதிய லூயி பிஷர், *1942ல் (அவரது மௌன விரதம் தொடங்கி 21 ஆண்டுகள் ஆன நிலையில்)* காந்தியைக் கேட்டார்.

“பல சிரமங்கள் என்னைப் பிய்த்து எடுத்தன. நான் கடினமாக உழைத்தேன். உஷ்ணமான ரெயில் வண்டிகளில் பிரயாணம் செய்தேன், ஓயாமல் பல கூட்டங்களில் பேசினேன். ஆயிரக்கணக்கான மக்கள் என்னிடம் வந்து கேள்விகள் கேட்டார்கள்; என்னோடு சேர்ந்து பிரார்த்தனை புரிய விரும்பினார்கள். அப்போதுதான் இது தொடங்கியது. வாரத்துக்கு ஒருநாள் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினேன். மௌன நாள் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டேன்.”

ஓய்வின் தேவைதான் காந்தியின் மௌனத்நாளை தொடக்கியிருந்தாலும் அதுவே அதன் விளைவாக இல்லை. “சந்தடிக்கும் குழப்பத்திற்கும் இடையே கடவுளிடம் நீங்கள் மௌனமான தொடர்பு கொள்ளுவதால் சஞ்சலமற்ற அமைதி ஏற்படுவதுடன் கோபத்தை அடக்கிக்கொள்ளவும் பொறுமையை வளர்த்துக்கொள்ளவும் அது உங்களுக்கு உதவியாக இருக்கும். ஒருவருடைய மனத்தில் கடவுள் தத்துவம் பூரணமாக நிறைந்திருக்கும்போது அவர் யார்மீதும் துவேஷமோ அல்லது கெட்ட எண்ணமோ கொள்ளுவது முடியாத காரியம்” (காந்தி நூல்கள், பத்தாம் தொகுதி, அத்தியாயம் 21).


## மௌனப் பயிற்சி

தான் சோதனை செய்து கண்ட சத்தியத்தை மற்றவரையும் பயிற்சிசெய்து பார்க்கச் சொல்வது காந்தியின் வழக்கம். அதைப் போல மௌனத்தையும் அவர் முன்மொழிந்தார். “மாலைப் பிரார்த்தனையின்போது ஐந்து நிமிட நேரம் மௌனமாக இருக்க வேண்டுமென நான் கூறினேன். கூட்டத்தில் உள்ளவர்களின் இதயம் பிரார்த்தனையில் லயித்துவிடுமாயின் சந்தடியெல்லாம் நின்றுவிடும். பின்னர் குழந்தைகள்கூட ஒத்துழைக்கக் கற்றுக்கொள்வார்கள். இங்கிலாந்தில் நடந்த கூட்டங்களுக்கு நான் சென்றது உண்டு. அங்கே அரைமணி நேரத்திற்கு மேலும் எல்லோரும் பூரண மௌனத்தை அனுசரிப்பார்கள். சமாதி என்பதற்கு மௌனம் என்பதே பொருளாகும். முனி, மௌனம் என்பவை ஒரே தாதுவிலிருந்து வந்த சொற்களாகும். முதன்முதலாக மௌனத்தை நாம் பயிற்சி செய்கிறபோது நம் மனத்தில் பல்வேறு எண்ணங்கள் உண்டாகும். நாம் தூங்கவும் ஆரம்பிப்போம். இந்தக் குறைகளை எல்லாம் அகற்றுவதற்காகவே மௌனம் விதிக்கப்பட்டிருக்கிறது. நாம் அதிகமாகப் பேசவும், உரத்த சப்தங்களைக் கேட்கவும் பழக்கப்படுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே மௌனத்தை அனுசரிப்பது கஷ்டமாக இருக்கிறது. எனினும் சிறிது பயிற்சி செய்வோமாயின் மௌனத்தை நாம் விரும்புவோம். அதில் விருப்பம் ஏற்படும்போது அது நமக்கு விவரிக்க முடியாத மனஅமைதியைக் கொடுக்கும்” (காந்தி நூல்கள், பத்தாம் தொகுதி, பிற்சேர்க்கை).

காந்தியினுடையது பயனுள்ள வேண்டுகோள். மௌனம் காப்பதன் மூலம் நவீன உலகின் இரைச்சல்களிலிருந்து விலகாமலேயே அதிலிருந்து தப்பிப்போம். நாம் பேசாத அந்தச் சிறுபொழுதிலாவது பூமி மேலும் ஒலிமாசு அடையாமல் இருக்கக்கூடும்.

பழ. அதியமான் ‘சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் திராவிட இயக்கத்தின் எழுச்சியும்’, ‘அறியப்படாத ஆளுமை’ முதலான நூல்களின் ஆசிரியர்.

# மூதுரை




## படித்து அறிந்தவர்

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

படிக்காத மக்களுக்குப் படித்து அறிந்தவர்களின் சொல்லானது எமன் போன்றதாகும். நேர்வழி வாழாதவர்க்கு தரும தேவதையே எமனாகும். மென்மையான வாழை மரத்திற்கு தான் பெற்ற காயே எமனாகும். இல்லத்தில் பொருந்தி வாழாத பெண்ணுக்கு அப்பெண்ணே அவளுக்கு எமனாவாள்.

(கருத்து - மூடர்களுக்கு அறிஞர்கள் சொல் துன்பத்தைத் தரும். பாவிகளுக்கு அறமே துன்பத்தைத் தரும். வாழைக்கு அதன் காயே துன்பத்தைத் தரும். வீட்டிற்கு அடங்கி நடக்காத பெண் துன்பமடைவாள் என்பதாம்)



## லண்டன் ஜெகதீஸ்வரம்பிள்ளை சகோதரிகள்

# வீணை அரங்கேற்றத்தில் ஒரு சுகானுபவம்

திரு ஜெகதீஸ்வரம்பிள்ளை, சங்கீதமும் அதன் இங்கிதமும் தெரிந்தவர்; புரிந்தவர். இது, அவர்களது புதல்விகள் தேநுகா, பிராமி வீணை அரங்கேற்றத்தில் மேலும் தெரிந்தது.

நல்ல ஆசிரியையைத் தேர்ந்திருக்கிறார். அரங்கேற்ற நிகழ்வை நேர்த்தியாக அமைத்திருக்கிறார். இடைவேளை இருக்கவில்லை. உருப்படிகளுக்கிடையே அறிவிப்புத் தடங்கல் இல்லை. பொருத்தமானவர்களை அழைத்து, பொருத்தமாக பேசவைத்தார். இரண்டரை மணி நேரத்தில் நிகழ்ச்சி நிறைவுற்றதோடு, காணமுடியாத அளவில் கலஞர்களையும் அங்கு காணவைத்தார்.

தந்தைக்கு அமைவாக, செல்விகள் இருவரும் தமது பங்கில் சிறப்பித்தார்கள். நல்லதொரு வீணை அரங்கேற்றம்.

செல்விகள் தேநுகா, பிராமி ஜெகதீஸ்வரம்பிள்ளை சகோதரிகளின் வீணை அரங்கேற்றம் லெதர்ஹெட் தியேட்டரில் நடைபெற்றது. சுபத்திரா ரகுராமனுடைய மாணவிகள் இவர்கள்.

கோட்டுவாத்தியம் பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் வீணை பயின்றவர் சுபத்திரா. சாகித்திய அம்சமும், லய அம்சமும் மேலோங்கவல்ல வீணை வாசிப்பில், சாகித்திய அம்சம் மேலிடும் சவாலுடனான 'காயகி' பாணி வாசிப்பு.

லால்குடி ஜெயராமனின் லாவகம் நிறைந்த "சலமு செய...'' வலஜி வர்ணமும் முத்தையா பாகவதரின் மோஹன கல்யாணி 'சித்திவிநாயகம் சேவேகமு'ம் எடுப்பாக களையூட்டிவிட, தீக்ஷிதரின் "அகிலாண்டேஸ்வரி...'' (துவிஜாவந்தி) அந்த ரம்மியத்தில் தொடர்ந்தது. சுபத்திராவினுடைய கணவர் வயலின் வித்வான் பாலு ரகுராமன் அமைத்திருந்த ஸ்வர கோவையும் இந்த களைக்கு காரணம்.

தேர்ந்தெடுத்த உருப்படிகளாக தியாகராஜரின் "மாரவைரி ரமணி..." (நாசிகாபூஷணி), சுவாதித் திருநாளின் "போகேந்திர சாயினம்..." (குந்தலவராளி), "சேவிக்கவேண்டும் ஐயா..." (முத்துத்தாண்டவர் அந்தோனிகா), பாரதியாரின் "தேடி உன்னைச் சரணடைந்தேன்..." (பிருந்தாவனி), பஹுதாரியில் அன்னமாச்சாரியார் கிருதி என்பன கனகச்சிதமாக இருந்தன.

ஜி.என். பாலசுப்பிரமணியத்தின் ராகமாலிகை "சொன்னதைச் செய்திட சாகசமா..." வந்தன தாரிணி, ஜயந்தஸ்ரீ, தேவமனோகரி, மாண்டு ராகங்களில் இருவரினதும் மெல்லிதான சாகசமா? பக்குவமாக, நிர்வகித்து வாசித்தார்கள்.


ஆபேரியில் மைசூர் வாசுதேவாச்சாரின் "பஜரே மானஸ..." பிரதான உருப்படி.

ராக ஆலாபனையிலும், கீர்த்தனையிலும் இரு கை மீட்டல்களும், தாள தந்திகளின் பிரயோகமும் வீணை வாசிப்பின் ஈர்ப்பான ரசனைக்கு துணையாகின்றன. தானமும் அப்படியே. இருவரும் அந்த ஈர்ப்போடு நன்கே வாசித்தார்கள். துல்லியமான கமகங்கள், ஸ்வர பிரஸ்தாரங்கள். ஒரு கன ராகமாக இருந்திருக்கலாமா என்ற ஓர் ஆதங்கம் எழுந்தது. பிரகாஷும் அவரது சகோதரர் பிரதாபும் மிருதங்கமும் கடமுமாக இணைந்து 'தனி'யில் ஜமாய்த்தார்கள். நிகழ்ச்சி முழுமையும், உற்சாகமூட்டும் ஓர் அநுசரணையுடன் வாசித்தார்கள்; வீணைக்கான வாசிப்பு.

பெஹாக் தில்லானா. மிருதங்க வித்வான் ஸ்ரீமுஷாணம் ராஜா ராவுடையது; முன்னர் கேட்டதில்லை.

ஆக, இச் சகோதரிகளின் அரங்கேற்றத்தில் மற்றிரு சகோதரர்கள் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டமை அபூர்வமானதும் சிறப்பானதுமாகும். 'காரைக்குடி சகோதரர்கள்' இவர்கள்.

வீணை வாசிப்பில் காரைக்குடி பாணி



தனியானது. இதில் 'காரைக்குடி சகோதரர்கள்' என்று முத்திரை பதிப்பவர்கள் காரைக்குடி சுப்பராம ஐயர், சாம்பசிவ ஐயர் என்போர். இவர்களுடைய பேரர்கள் மிருதங்க வித்வான் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி, வீணை வித்வான் காரைக்குடி சுப்ரமண்யன்.

காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி நமக்கு தெரிந்தவர். சென்னையில் 'ப்ருஹத்வனி' இசை ஆராய்ச்சி யைத்தின் இயக்குநரான டாக்டர் சுப்ரமண்யன் வீணையில் சாம்பசிவ ஐயரின் வாரிசு. இவர்கள் இருவரும் இவ்வரங்கேற்றத்தில் கலந்துகொண்டு, அரங்கேற்றத்தின் நேர்த்திக்கு சாட்சியம் சொன்னார்கள்.

இளம் வித்வானான அகிலேஷ் ஸ்ரீகுமார் அழகாக, அளவாக நிகழ்ச்சி அறிவிப்பைச் செய்தார்.

ஆக, கட்டியெழுப்பவல்ல காத்திரமான ஓர் இசைத் தளத்தை தங்களின் அரங்கேற்றத்தில் தேநுகா, பிராமி சகோதரிகள் வெளிப்படுத்தினார்கள்.

மாலி

## உண்மைகள் உறங்குவதில்லை

1993ம் ஆண்டு லூசியம் லேம்பிட்கில் பகுதியில் நான் வாழ்ந்து வந்தேன். அந்த காலகட்டத்தில் லூசியத்தை சேர்ந்த கணேசமூர்த்தி என்பவர் ஒவ்வொரு நாளும் எனது வீட்டுக்கு வருவார். அந்த நேரத்தில் அவர் லூசியத்தில் ஒரு சைவக்கோவிலும் இல்லை அதைக் கட்டவேண்டும் இல்லையேல் நான் லூசியத்தை விட்டு போகவேண்டும் என்று அடம் பிடித்தார் இந்த கால கட்டத்தில் சச்சிதனந்தம், அருள்தாஸ் போன்வர்களும் ஒரு கோவில் கட்டவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்ததை நான் அறிவேன். நான் கணேசமூர்த்தியை சச்சிதானந்தத்திற்கு அறிமுகப்படுத்தினேன். இவரும் சேர்ந்து இந்தப் பணியை செய்யலாம் என்றேன். சச்சிதானந்தம் அவர்களுக்கு சிவன் கோவில் கட்ட விருப்பம் கணேசமூர்த்திக்கு பிள்ளையார் கோவில் கட்ட விருப்பம். அதை பற்றி ஆலோசனை செய்வதற்காக ஈஸ்டாம் நாகநாத குருக்களிடம் சென்றார்கள். அவர் இவர்களுக்கு புத்திமதி சொல்லி லூசியம் பகுதியில் சிவன்கோவில் இல்லை ஆகவே சிவன்கோவில் கட்டினால் நல்லது என்று கூறினார் அதனால் கணேசமூர்த்தி சிவன்கோவில் வீட்டில் கூடி கோவில் கட்டுவதற்கு ஆயத்தம் செய்து கோவிலை உருவாக்கினார்கள். இதுதான் நடந்த உண்மை.

## இவர்களை திருத்த கடவுளாலும் முடியாது

யாழ்ப்பாணத்தில் நூறுவருடங்களுக்கு முன் நல்லூர் கந்தசாமி கோவில் கட்டப்பட்டது. ஆனால் இந்த கோவில் கட்டப்பட்ட முறையில் சில பிழை இருப்பதாக ஆறுமுகநாவலர் நிர்வாகத்திடம் கூறினார். இந்த கோவிலின் மூலஸ்தான தெய்வம் ஒரு கடவுளின் ஆயுதமாக இருந்த படியால் அது பெரும் தவறு என சுட்டிக்காட்டி அங்கு வணக்கத்திற்கு போக வேண்டாம் என மக்களுக்கு கூறினார். மக்களே இவருடைய ஆலோசனை செவிசாய்க்கவில்லை. இதன் காரணமாக அவர் யாழ்ப்பாணத்தை விட்டு தமிழ்நாடு சென்று சிதம்பரத்தில் குடியேறினார். இன்றும் அவருக்கு ஒரு கோவில் சிதம்பரத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய இந்த ஆலோசனையை கேட்காத மக்கள் எங்களின் ஆலோசனையைக் கேட்கவா போகிறார்கள்.

# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

**கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.**

இந்த உலகம்,
அன்பும் இரக்கமும்
இணைந்த கண்ணோட்டம்
எனப்படுகிற பெரும் அழகைக் கொண்டவர்கள்
இருப்பதால்தான் பெருமை அடைகிறது.

**கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.**

அன்புடன் அரவணைத்து
இரக்கம் காட்டும் கண்ணோட்டம்
எனப்படும் உலகியலுக்கு,
மாறாக இருப்பவர்கள்
இந்தப் பூமிக்குச் சுமையாவார்கள்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்
**விலை. 2 பவுண்ட் மட்டும்**



Happy Akshaya Tritiyo

லூசியத்தில் தரமான நகைக்கடை

# தினேஷ்

ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்

## Thinesh

**Jewellers & Textiles**

**276, Lewisham High Street**
**Lewisham**
**London SE 13, 6JZ**
**Tel : 020 8613 9569**
**www.thinesh-jt.com**

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

# கற்பகம்

**தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்**

## KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்



36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
**Tel : 208 694 88 10**


Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

தானாக உயர்வதுதான்
வயது
விடாமல் துரத்துவதுதான்
காலம்
தடுக்கமுடியாததுதான்
நேரம்
கடக்கத் துடிப்பதுதான்
இளமை
தொடவேண்டியதுதான்
இலக்கு

இத்தனையும் தான்
**வாழ்க்கை**












செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
SELVARAJA GOLD HOUSE & TEXTILES
£ 300க்கு மேல் நகை வாங்குவோருக்கு லட்சுமி தங்கக் காசு இலவசம்
❖ உங்களிடம் இருக்கும் பழைய தங்கத்திற்கு அதிகூடிய விலையில் உடன் பணம்.
❖ சொற்ப கூலியை மட்டுமே செலுத்தி புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
❖ எங்களிடம் தாலிக்கொடி செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள், பட்டுப் புடவைகள் 50% விலைக்கழிவில்.
❖ புதிதாக ஆரப்பிக்கப்பட உள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகுங்கள்.
162 B Mitcham Road London SW17 9NJ
Tel : 208 767 3795 Mobile : 078 25005269

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**



# SUN MOTORS



Mechanical / Body Repairs /
Recovery / Tyres

**Tel : 02086920232**

R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW

## லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும் தமிழர் உணவு வகைகள்

லீலா
தயாரிப்புகள்

*உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்*

புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும்
தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.

லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்

# Vaani Foods

தொலைபேசி இலக்கம்
**0208 668 7648**


SURYAA
CURRY LEAVES
CINNAMON
4 TYPES OF CHILLIES
PEPPER
CUMIN
TURMERIC
FENUGREEK
FENNEL
FENNEL
CLOVE
RAMPE
CORIANDER
BEST SELLER
MILD
HOT
EXTRA HOT
100% NATURAL
NO ARTIFICIAL COLOURS
NO ARTIFICIAL FLAVOURS
CHILLIES 4 BLEND
The Right Choice
SURYAA
ROASTED CURRY POWDER
900g EXTRA HOT
•500g
•900g
•3 Kg




சென்னை : ஃபோரம் விஜயா மால், வடபழனி • ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி • பனகல் பார்க், தி. நகர்.
திருநெல்வேலி : வண்ணார்பேட்டை • வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்.
கோயம்புத்தூர் : ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு | பெங்களூரு : ஒரையன் மால், ராஜாஜி நகர்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks


லண்டனில் அதிக
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை செய்பவர்கள்
லண்டனில் முதல்தர காய்கறி இறக்குமதி
மொத்த விற்பனையாளர்கள்
Vaani Foods
தொலைபேசி இலக்கம் 0208 668 7648


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshmis Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை